பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 27 வெள்ளிக்கிழமை (10-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:166

# சமாதானத்தைக் குழப்ப கடற்படை முயல்கின்றது

## தமது படகுகள் தாக்கப்பட்டிருந்தால் நடப்பதே வேறு என்கிறார் தமிழ்ச்செல்வன்

கொழும்பு,மே10

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முறியடிக்கவே கடற்படையினர் விரும்புவதாகத் தெரிகின்றது. சமாதான முயற்சிகளுக்கு முற்றுமுழுதான எதிர்ப்போக்கையே கடற்படை கொண்டிருக்கின்றது. 1987 இலும், 1995 இலும் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததற்கும் கடற்படையே காரணம்.**

**கடலில், எமது படகுகள் எதையாவது கடற்படை தாக்க முற்பட்டிருக்குமானால் நடப்பது வேறாகவே இருந்திருக்கும். அதனால் ஏற்படும் விளைவுகள் நிச்சயம் பாரதூரமானதாகவே இருந்திருக்கும்.**

**- இவ்வாறு கடும் தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

'தமிழ்நெற்' இணையத்தளத்திற்கு வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

வாகரைக் கடலில் மீனவர் படகுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அச்சம்பவத்தில் இரு முஸ்லிம் மீனவர்கள் கொல்லப்பட்டமை ஆகியன தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரது பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**கண்டி வீதி போக்குவரத்து**

யாழ். கண்டி ஏ-9 வீதி 24மணி நேரமும் பிரயாணிகளின் போக்குவரத்துக்கும், பொருள்களை லொறிகளில் கொண்டுசெல்வதற்கும் திறந்து வைத்திருக்கப்படவேண்டும். அதில் சில நிர்வாகக் கஷ்டங்கள் இருக்கும் என்பது தெரியும். குறைந்தபட்சம் காலை 6 மணியிலிருந்து மாலை 6மணி வரையிலும் சனி, ஞாயிறு, விடு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்தோர் நகைகளை மீளப்பெறலாம்

யாழ்ப்பாணம்,மே10

தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகை அடவுக் கடன்பெற்று இன்றுவரை அவற்றை மீட்காதவர்களுக்கு 96ஆம் ஆண்டு ஏப்ரல்முதல் வட்டிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்று தமிழீழ வைப்பகத்தின் நடுவப்பணியக மேலாளர் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் தமது யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகை அடவுக்கடன் பெற்று இதுவரை அவற்றை மீட்காதவர்கள் தமது அடவு நகைகளை முற்பணத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கடற்செயற்பாட்டை கண்காணிக்க

## நோர்வேயுடன் இணைந்து இந்தியா செயற்படவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு,மே10

விடுதலைப் புலிகளின் கடற் செயற்பாடுகளைக். கண்காணிக்க நோர்வே கண்காணிப்புக் குழுவுடன் இந்தியா இணைந்து செயற்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் கடற் பாதைகள் இந்தியக் கடற்படைக்குப் பழக்கமானவை என்றும் - இந்தியாவின் உதவியைப் பெறுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் செயற்பாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் வாகனங்களுக்கு பத்து வருட வரி விலக்கு!

கொழும்பு,மே10

யாழ்ப்பாணம்,வன்னி ஆகிய மாவட்டங்களில் உள்ள வாகனங்களுக்கு பத்து வருட வரிவிலக்கு அளிக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்ற சமயம் இது பற்றிய விடயத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் எழுப்பினார்.

கடந்த பத்து வருடங்களாக எரிபொருள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதி ஆகியன இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் வாகனங்கள் பல ஓடாமல் இருந்தன. அந்த வாகனங்களுக்கு கடந்த 10 வருட காலத்துக்கான வரியை விலக்கி இவ்வருடத்துக்கான வரி மட்டும் வசூலிக்க வேண்டும் என்று மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் மேற்படி உத்தரவை விடுத்தார்.(ம-3)

### கண்டி வீதியூடான போக்குவரத்து குறித்து

## கண்காணிப்புக்குழுத் தலைவர் வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு!

கிளிநொச்சி,மே10

ஏ-9 கண்டி வீதியில் சீரான போக்குவரத்தை மேற்கொள்வதில் உள்ள தடைகள், பிரச்சினைகள் தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட்டுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நேற்று கிளிநொச்சியில் இரு கட்டப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

கண்காணிப்புக் குழுவின் வன்னி பிராந்தியத் தலைவர் பேர்ட் எஸ். ஹாட்லி கெய்ன் சகிதம் விசேட ஹெலியில் நேற்றுக்காலை 11.30 மணிக்கு கண்காணிப்புக் குழுவின் தலைவர் கிளிநொச்சியை வந்து சேர்ந்தார்.

கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும் இடையில் முற்பகலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினருடன் இன்று சந்திப்பு

கிளிநொச்சி,மே10

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று மாலை 4மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

அரசியல்துறையின் அழைப்பின் பேரில் வன்னி செல்லும் நான்கு கட்சிகளின் தேசிய கூட்டமைப்பினர் இன்றைய அரசியல் நிலை குறித்துக் கலந்துரையாடுவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) சேர்ந்த சிவசக்தி ஆனந்தன், திருமலை மாவட்டப் பொறுப்பாளர் ரகுநாதன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வர். (ம-3)

## ஜூன் 2இல் பிரதமர் இந்தியா செல்வார்

கொழும்பு,மே10

பிரதமர் ரயில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 2ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேசுவார். (ம)

### முகமாலைப் பகுதியில்

## செஞ்சிலுவைக் குழுவின் பிரசன்னம் தேவையற்றது

### கண்காணிப்புக்குழுவிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே10

முகமாலையில் படையினரின் சோதனை நிலையத்திற்கும், விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்திற்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் தேவையற்றது. அதை உடன் வாபஸ்பெற வேண்டும்.

கண்காணிப்புக் குழுவின் யாழ். பிரிவிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரிவின் கூட்டம் நேற்று முன்தினம் அந்தப் பிரிவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது. அச்சமயமே கண்காணிப்புக் குழுவின் புலிகள் தரப்பு உறுப்பினர்கள் இக் கோரிக்கையை விடுத்தனர்.

"செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையே இடம்பெறுகின்றது. இதனால் பொது மக்கள் தமது போக்குவரத்தில் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு அனுமதியுங்கள்

### புலிகள் பிரமுகர் மேலவன் கோரிக்கை

வவுனியா,மே10

வவுனியா ஓமந்தைப் பகுதியில் படையினரின் சோதனை நிலைப்பத்துக்கும் விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு படையினர் வசதி செய்யவேண்டும்.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலவன் வவுனியா படைகளின தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்னவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் படைத் தளபதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்தி முரளி**



மாறி மாறி ஆர்ப்பாட்டம் நடத்து றதுதான் உவையளுக்கு வேலை எண்டாகிப்போச்சுப் பாருங்கோ.....

## அரசுக்கு எதிராகப் பேரணி பொ. ஐ. மு. 16இல் நடத்தும்

கொழும்பு,மே10

நாட்டைப் பிளவுபடுத்த அரசு முயற்சிப்பதாகத் தெரிவித்து அதைக் கண்டிக்கும் முகமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் 16ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நுகேகொடையில் நடத்தவிருக்கின்றது.

நாட்டைப் பிளவுபடுத்துவது, பட்டினி, ஒடுக்க முறை ஆகியவற்றைக் கண்டித்து அரசுக்கு எதிராக நாடு தழுவியவகையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் -

அதற்கமைய முதலாவது ஆர்ப்பாட்டம் நுகேகொடையில் இடம்பெறவுள்ளது என்றும் -

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-12)

# இராணுவ முகாமினால் ஏற்படும் அசௌகரியங்களை நீக்குங்கள்

## கண்காணிப்புக்குழுவிற்கு பருத்தித்துறை நகர மக்கள் கடிதம்

தென்மராட்சி,மே10

பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள இராணுவ முகாமினால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசளகரியங்களை நீக்க உதவும்படி பருத்தித்துறை வாழ் மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பகுதியில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால் தாம் அனுபவித்து வரும் கஷ்டங்கள், இன்னல்கள் ஆகியன குறித்து கண்காணிப்புக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில் மக்கள் விவரமாக விளக்கியுள்ளனர்.

கண்காணிப்புக் குழுவிற்கு அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தின் முக்கிய விடயங்கள் வருமாறு:-

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இன்றுவரை பருத்தித்துறை நகரில் அமைந்திருக்கும் பிரதான இராணுவமுகாம் அகற்றப்படவில்லை. இந்த முகாம் தொடர்ந்தும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் பொதுமக்கள் ஆகிய நாம் தொடர்ந்தும் சுமுகமான நிலையில் வாழமுடியாமல் இருக்கின்றோம்.

மேற்படி இராணுவ முகாம் பின்வரும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுவதோடு சில நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்கமுடியாத நிலையில் இருக்கின்றன. சில நிறுவனங்கள் இடம்பெயர்ந்து இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை பிரதம தபால் நிலையம், பருத்தித்துறை மத்திய மருந்தகம், பருத்தித்துறை நகர சபை அலுவலகம், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை பல நோ.கூ.சங்கம், பருத்தித்துறை எரிபொருள் நிலையம், பருத்தித்துறை சிறைச்சாலை, நீதிவான் வாசஸ்தலம், பருத்தித்துறை சுங்கத் திணைக்க உத்தியோகத்தரின் வாசஸ்தலம், சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம், கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தானம், வை.எம்.சி.ஏ. தேவாலயம், ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானம் ஆகிய பொது அமைப்புகள் இந்த இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்குள் அடங்கியுள்ளன. மேலும் இந்த இராணுவ முகாம் இருக்கும் வீதிகள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் கீழ்வரும் அசௌகரியங்களை பொதுமக்கள் ஆகிய நாம் எதிர்நோக்குகின்றோம்.

☆ 751 இலக்க பஸ் பாதை, பிரதான வீதி, கடற்கரை வீதி, காங்கேசன்துறை வீதி ஆகிய வீதிகள் மூடப்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர்கள் அனுபவித்துவரும் போக்குவரத்துச் சிரமங்கள்.

☆ கல்லூரி வீதி, நீதிமன்ற வீதி, பிரதான வீதி, கடற்கரை வீதி ஆகியன மூடப்பட்டுள்ளமையால் மாணவர்கள், பக்தர்கள் எதிர்நோக்கும் இராணுவக் கெடுபிடிகள்.

☆ மக்களின் மாலைநேரப் பொழுதுபோக்கு நிலையமாகக் கருதப்படும் நடராசா திறந்தவெளியரங்கு அதனுடன் அண்டிய கடற்கரைப் பிரதேச மக்களின் பாவனைக்கு ஏற்றவையாகக் காணப்படாமை.

மேற்படி அசௌகரியங்களைத் தீர்த்துவைக்க உதவுங்கள் - என்றுள்ளது. (ம117-173)

# வவுனியாவில் கூட்டுறவு ஊழியரை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதம்

வ்வுனியா,மே10

வவுனியா பிரதேசத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் விஷேட புலனாய்வுப் பிரிவினரால் கடந்த ஒக்டோபரில் கைது செய்யப்பட்ட சங்கத்தின் சிரேஷ்ட பணியாளர் து.கனகரத்தினத்தை விடுதலை செய்யக்கோரியே அவர்கள் இப்போராட்டத்தை நடத்தினர்.

இப்போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட மூன்று அம்சக் கோரிக்கைகள் வருமாறு:-

☆ நீண்டகாலமாகத் தடுத்து வைக்கபட்டிருக்கும் இப்பணியாளரை உடன் நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தவேண்டும். அன்றேல் விடுதலை செய்யவேண்டும்.

☆ இவர் நீரிழிவு, இருதய நோயாளியாவார். தடுத்து வைக்கப்பட்டுள்ள காலத்தில் இவருக்கு எதுவித மருத்துவ வசதிகளும் செய்யப்படவில்லை. எனவே உடனடியாக இவருக்கு மருத்துவ வசதி வழங்கப்படவேண்டும்.

☆ இவரது குடும்ப பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு இவரை விடுவிக்கவேண்டும்.

வவுனியா பஷார் வீதியில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகம் முன்பாக நடைபெற்ற உண்ணாவிரதத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டுறவுத் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

14நாள்களில் இவரது விடுதலை தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத பட்சத்தில் மீண்டும் போராட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் போராட்டம் வவுனியா மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் கூட்டுறவு அமைச்சர் ஏ.ஆர்.எம்.அப்துல் காதர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# குடாநாட்டு நீர் விநியோகத் திட்டங்கள் விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்

யாழ்ப்பாணம்,மே10

யாழ்.குடாநாட்டின் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் கைவிடப்பட்ட பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள நீர் விநியோகத் திட்டங்களை மீண்டும் புனரமைப்பதற்கும் -

ஏனைய இடங்களில் உள்ள திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் - நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

அவை தொடர்பான அறிக்கைகளை கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் - இதற்குரிய வேலைத்திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் -

யாழ்ப்பாணம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-4)

## தெற்கில் இருந்து வருவோரால்

# வடமராட்சி சிற்றுண்டிகளுக்கு மீண்டும் மவுசு வருகின்றது!

வடமராட்சி கிழக்கு,மே10

தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வரும் மக்கள, வடமராட்சிப் பகுதிகளுக்கு வந்து, இங்கு புகழ்பெற்றுள்ள பருத்தித்துறை தட்டைவடையினையும், எள்ளுப்பாகு என்பவற்றையும் கொள்வனவு செய்து தமமுடன் கொண்டு செல்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்களைச் தேடிச் சென்று அவர்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (ம-182-173)

## கலைஞர்கள், ஊடகவியலாளருடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம்,மே10

லண்டன் பி.பி.ஸி., ஐ.பி.ஸி. நிறுவனங்களில் பணியாற்றியவரும் குடாநாட்டின் பிரபல நாடக நடிகரும் நெறியாளருமான அ.தார்ஸீசியஸ் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரது ஏற்பாட்டில் குடாநாட்டு நாடகக் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் அவருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறும். ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

## இனங்களிடையேயான சமாதானத்தை வளர்க்க

# விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்கு காத்தான்குடியிலிருந்து யாத்திரை

காத்தான்குடி,மே10

காத்தான்குடிப் பிரதேசத்திலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உன்னிச்சை, உறுகாமம் போன்ற பிரதேசங்களுக்கு சமாதான யாத்திரை நடத்தப்படவிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பிரதம அமைப்பாளர் மர்சூர் அஹமது லெப்பை இதனைத் தெரிவித்தார்.

காத்தான்குடி நகரிலிருந்து 50 மோட்டார் சைக்கிள்களில் செல்லும் சமாதான யாத்திரைக் குழுவினர் உன்னிச்சைப் பள்ளிவாசலில் ஜும்மா தொழுகையில் ஈடுபடுவர். அங்குள்ள மக்களுடனும் அவர்கள் கலந்துரையாடுவர்.

அரசியல் சார்பற்ற ரீதியில் இனங்களிடையே ஐக்கியம்,- சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் செல்லவிருக்கும் இச்சமாதான யாத்திரையில் வைத்தியர்கள், புத்திஜீவிகள், சமூகப் பணியாளர்கள் உட்படப் பலரும் பங்குகொள்வர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்,மே10

யாழ்நகரில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிவந்த இராணுவ மோட்டார் சைக்கிளும் நாவலர் வீதி வழியாக வந்த மாநகர சபையின் டிராக்டருமே நாவலர் வீதிச் சந்தியில் விபத்துக்குள்ளாகின.

இதனால் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த இராணுவச் சிப்பாய் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ம-180)

## யாழ். குடாநாட்டில்

# போதிய இடவசதிகள் இன்றி அல்லற்படும் தெற்கு மக்கள்

யாழ்ப்பாணம்,மே10

நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டுக்குப் படையெடுக்கும் தென்பகுதி மக்கள் இங்கு தங்குவதற்குப் போதிய விடுதிகள் இன்றி அல்லற்படும் நிலைமை காணப்படுகின்றது.

கடநதகால யுத்த அனர்த்தங்களினால் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த தங்குமிட விடுதிகள், மூடப்பட்டுவிட்டன. இங்கிருக்கும் மூன்று பெரிய விடுதிகளும், இராணுவத்தினரினதும், பொலீஸாரினதும் பாவனையில் இருந்துவருகிறது.

இதேவேளை -

யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு முன்பாக உள்ள தங்குவிட விடுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதி வழங்கப்படுகிறது.

இத்தகைய நிலைமையினால் தெற்கிலிருந்துவரும் மக்கள் போதிய தங்குமிட வசதிகள் இன்றிப் பெரும் அவதிப்படுகின்றனர்.

இதனால் இவர்கள் யாழ்.முற்றவெளிப் பகுதி, துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் தாம் வரும் வாகனங்கள் என்பவற்றில் தமது இரவுப் பொழுதைக் கழித்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. (ம-ரி-86)

## பாலாவி உல்லாச விடுதி உரிமையாளர் சுட்டுக்கொலை

புத்தளம்,மே10

புத்தளம் - கொழும்பு வீதியில் 3ஆம் மைல் அருகேயுள்ள பாலாவி என்னுமிடத்தில் உல்லாச விடுதி நடத்தும் ஏ.எம்.ஆரியரத்னா என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

அவர் அணிந்திருந்த பல ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்த தங்கச் சங்கிலி, மோதிரம், கைக்கடிகாரம் என்பன அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

புத்தளம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ரன்ஜித் தலைமையிலான பொலீஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை கொலையாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. (ம)

## மிதிவெடியில் சிக்கி சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்,மே10

மணியந்தோட்டப் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற சிறுவன் ஒருவன், வீட்டு வாசலில் கிடந்த மிதிவெடியில் சிக்கி இடது காலில் படுகாயமடைந்தான்.

வரணிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது கச்சேரிப் பகுதியில் வசித்துவரும் பி.வினோதரன் (வயது 16) என்ற சிறுவனே காலில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9-12)

## அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மே10

கொழும்பில் தங்கியிருந்து யாழ்ப்பாணம் திரும்புவோர் அங்கு இடம்பெயர் நிவாரணத்தை பெற்றுக்கொணடமைக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தால் இங்கும் அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் தங்கியிருந்துவிட்டு திரும்புபவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டாம் என்று கிராம சேவையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான செய்தி குறித்தே அரச அதிபர் மேற்கண்ட விளக்கத்தை அளித்துள்ளார்.(ம-3)

# உதவிக் கணக்காய்வாளர் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே10

கூட்டுறவுத் திணைக்களத்தின் முன்பாகக் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த உதவிக் கணக்காய்வாளர்களின் மறியற் போராட்டம் நேற்றுமுன்தினம் மாலையுடன் இடைநிறுத்தப்பட்டது. இதனை அடுத்துக் கூட்டுறவுத் திணைக்களத்தின் பணிகள் வழமைபோன்று நேற்று இடம்பெற்றன.

கடந்த ஒன்பது நாள்களின் பின்பு அலுவலகம் திறக்கப்பட்டமையால் நேற்று மீணடும் பணிக்கு வந்த உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும் தமது பணிகளில் ஈடுபட்டனர். (ம-10)

## பெண் பொலீஸிடம்

# பாலியல் இம்சை புரிந்த பல்கலை மாணவனுக்கு சிறை

கொழும்பு,மே10

பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பாலியல் இம்சைக்குள்ளாக்கிய பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையை வழங்கி நீர்கொழும்பு நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

இந்த மாணவன் நீர்கொழும்பில் இருந்து கொழும்புக்கு தனியார் பேருந்து ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தபோது பெண் பொலீஸ கான்ஸ்டபிளை பாலியல் இம்சைக்கு உள்ளாக்கியதாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாத்தளை உக்குவளையைச் சேர்ந்த இந்த மாணவன் கடந்த 2000 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-8)

## வடக்கு - கிழக்கு மாகாண

# உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் குழு வருகை

யாழ்ப்பாணம்,மே10

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருக்கிறது.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களம், நகரசபை, மாநகரசபை ஆகியவற்றில் பணிபுரிபவர்களுக்கு மனித வளத் தரவுத்தளம் தொடர்பான பயிற்சியை மற்றும் கணனிப்பதிவு பற்றிய அறிவுறுத்தல்கள், பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதற்காகவே இக்குழுவினர் இங்கு வருகை தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.பாலசிங்கத்தால் தொலைநகல் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்திற்கும், யாழ். மாநகரசபைக்கும் விஜயம் செய்யவுள்ள இக்குழுவினர் நாளை வல்வெட்டித்துறை மற்றும் சாவகச்சேரி உள்ளூராட்சி அலுவலகங்களுக்கும், நாளை மறுதினம் பருத்தித்துறை பிரதேசத்திற்கும் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி-12)

# கொழும்புக் கொச்சிக்கடையில் பட்டப்பகல் வேளை

## அதிரடிச் சுற்றிவளைப்பில் சிக்கினார்

## போலி நிதிப் பொறுப்பாளர்!

**உண்மைச் சம்பவம்**

**தமிழில்: கஜனி**

**நாட்டில் நிலவும் குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி கப்பம் பெற்ற ஆசாமிகள் பற்றிய பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். இதுவும் அவ்வாறு நடைபெற்ற உண்மைச் சம்பவம்தான். ஆனால், இதில் போலி ஆசாமிகள் வகையாக மாட்டிக் கொண்டனர்.**

**இந்தச் சம்பவத்தைத் தொகுத்து 'லக்பிம' வார இதழ் கட்டுரை வடிவில் வெளியிட்டுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

திகதி 21.04.2002 நேரம் பிற்பகல் 2.45 கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள அப்துல் கபூர் மாவத்தை 12/ஏ இலக்கத்திலுள்ள ஆடம்பர வீட்டின் முன்னால் வேகமாக வந்த வான் ஒன்று திடீரென நிறுத்தப்பட்டது.

அந்த வீட்டின் சொந்தக்காரர் ஒரு கோடீஸ்வரர். பெயர் சுப்பிர மணியம் கணபதிப்பிள்ளை யாழ்ப் பாணத்திலுள்ள இயற்றாளை (வரணி) அவரது சொந்த ஊர்.

குடாநாட்டில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை காரணமாக 12 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு குடும்பத்தினருடன் கொழும்பு சென்றார்.

தறபோது அவருக்கு "கிறிஸ்கோ" என்ற பெயரில் கொட்டாஞ்சேனையிலும் கதிரேசன் வீதியிலும் இரு 'லொட்ஜ்கள்' உள்ளன. இவற்றை விட கொழும்பு நகரில் பல வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜென்ஸிகளும் மற்றும் பல வியாபார நடவடிக்கைகளும் உள்ளன.

நிறுத்தப்பட்ட வானின் முன்பக்க மற்றும் பக்கவாட்டில் அமைந்துள்ள கதவுகள் இரண்டும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டன. வாட்ட சாட்டமான இருவர் அந்த வாகனத்திலிருந்து இறங்கினர்.

அவர்களில் ஒருவர் வீட்டின் முன் கதவை அண்டி மணியை அடித்தார். மற்றவர் வீட்டில் இருப்பவர்கள் பார்க்கமுடியாத விதத்தில் அந்த வீட்டின் மதிலுடன் சாய்ந்தவாறு நின்றார்.

வீட்டிற்கு வந்திருப்பவர் யார் என்பதை அறிய கணபதிப்பிள்ளையின் மனைவி வாசலை நோக்கி வந்தார்.

"நாங்கள் முதலாளியைச் சந்திக்க வந்துள்ளோம். முக்கியமான வியாபாரம் குறித்துப் பேசவேண்டும். முதலாளி எங்களுக்கு நல்ல பழக்கம்" என வாசலில் மணிஅடித்தவர் கணபதிப்பிள்ளையின் மனைவியிடம் கூறினார்.

தனது கணவனின் நண்பர்கள் இதற்கு முன்னரும் இவ்வாறு வந்துள்ளதால் கணபதிப்பிள்ளையின் மனைவிக்கு எதுவித சந்தேகமும் எழவில்லை. கதவைத் திறந்தார் வீட்டு மணியை அடித்தவர் மாத்திரம் வீட்டிற்குள் வந்து சொகுசான கதிரையில் அமர்ந்தார்.

அப்போது கணபதிப்பிள்ளை நித்திரையில் இருந்தார். மனைவியின் தகவலையடுத்து தன்னைச் சந்திக்க வந்திருக்கும் நண்பர் யார் என்பதை அறியும் ஆவலுடன் முன் மண்டபத்துக்கு வந்தார்.

"மிஸ்டர் கணபதிப்பிள்ளை. கொழும்பில் உள்ள விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் நான. எனது பெயர் சுரேஷ் இயக்கப் பெயர் தூயவன். கொழும்பில் உள்ள உங்களைப் போன்ற வர்த்தகர்களின் ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, உங்களைப் போன்றவர்களிடமிருந்த நிதி சேகரிப்பதற்கு இயக்கம் என்னை நியமித்துள்ளது. உங்களிடம் இருந்து எமக்கு ஏழு லட்சம் ரூபா தேவைப்படுகிறது" எனக் கூறினார்.

கணபதிப்பிள்ளையைக் கண்டதுமே வந்தவர் கடகடவெனக் கூறத் தொடங்கினார்.

கணபதிப்பிள்ளைக்கு எதுவித குழப்பமும் ஏற்படவில்லை. மனதிற்குள் ஓரளவு பயம் தோன்றினாலும் அதை வெளிக்காட்டாமல், "உங்களை விடுதலைப் புலிகள் என எப்படி நம்புவது"? என வந்தவரிடம் வினாவினார்.

"இது சயனைட் குப்பி. இது இயக்கம் எனக்குத் தந்த அடையாளத் தகடு. இப்போதாவது நீங்கள் எங்களை நம்புகிறீர்களா? இல்லையேல் வேலை பிழைச்சாலும் பிழைக்கும்" என சயனைட் குப்பியையும் அடையாளத் தகட்டையும் கணபதிப்பிள்ளைக்குக் காட்டி சற்று உரத்த குரலில் கூறினார்.

"ஏழு லட்சம் தர எனக்கு வழியில்லை. இப்போது வியாபாரம் நட்டத்திலேயே நடக்கிறது. ஆனபடியால் உங்களது வேண்டுகோளை என்னால் நிறைவேற்ற முடியாது" எனக் கணபதிப்பிள்ளை கூறினார்.

"அப்படியென்றால் நியாயமான வழியொன்று கூறுகின்றேன். நீங்கள் எங்களுக்கு மூன்று லட்சம் தர வேண்டும். ஆனால், ஒரு லட்சம் இன்று தரவேண்டும். மிகுதி ஒரு கிழமைக்குள் எங்களுக்கு கிடைக்க வேண்டும்" என வந்தவர் பதிலளித்தார்.

ஆனால், தன்னால் காசு தரமுடியாது எனக் கணபதிப்பிள்ளை தொடர்ந்து கூறிக்கொண்டே இருந்தார். அந்த நேரத்தில் வந்தவருக்கும் கணபதிப்பிள்ளைக்கும் இடையே உரத்த குரலில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஒருநாளும் இல்லாத வகையில் தங்களது தந்தையுடன் உரத்த குரலில் உரையாடுவது யார் என்பதை அறிய கணபதிப்பிள்ளையின் ஆண் குழந்தைகள் இரண்டும் தங்களது அறைக் கதவுத் திரைச்சீலையூடாக வெளியே பார்த்தனர்.

"அந்தச் சிறுவர்கள் இருவரும் உங்களுடைய பிள்ளைகளா?" என வந்தவர் கணபதிப்பிள்ளையிடம் கேட்டார்.

"ஓம், என்னுடைய பிள்ளைகள் தான்" எனக் கணபதிப்பிளை தெரிவித்தார்.

"உமக்கு வேறு பிள்ளைகள் இல்லையா?" இது வந்தவரின் கேள்வி.

"இன்னும் ஒரு பிள்ளை இருக்கிறது. அது மகள்". இது கணபதிப்பிள்ளையின் பதில்.

"இந்தப் பிள்ளைகள் உயிருடன் இருப்பதைப் பார்க்க உங்களுக்கு ஆசையில்லையா? அந்த ஆசை இருந்தால் எங்களுக்கு காசைத் தாரும். இல்லையெனில் என்ன நடக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா" என வந்தவர் கடும் தொனியில் கூறினார்.

"எங்களது பிரச்சினைக்குள் பிள்ளைகளை இழுக்கவேண்டாம். என்னிடம் பணம் இல்லை. இன்று ஞாயிற்றுக்கிழமை. வங்கியிலும் பணம் பெற முடியாது. ஆனபடியால் நான் யாரிடமாவது கேட்டுவாங்கி ஒரு பகுதியையாவது தருகிறேன். மிச்சக் காசை நீங்கள் கேட்கும் நாளில் தருகிறேன்" என கணபதிப்பிள்ளை வந்தவரையும் பிள்ளைகளையும் மாறி மாறிப் பார்த்தவாறு நடுங்கும் தொனியில் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டிப் பகுதியில் கணபதிப்பிள்ளைக்கு நண்பர் ஒருவர் இருக்கிறார். அவரது பெயர் நேசன். வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்.

கணபதிப்பிள்ளை தொலைபேசியில் சில இலக்கங்களை அழுத்தி நேசன் வீட்டுடன் தொடர்பு கொண்டார். நேசனின் மனைவியே மறுபுறத்தில் பதிலளித்தார். நேசன் வீட்டில் இல்லை. அவரது மனைவியுடன் பேசி 50ஆயிரம் ரூபா ஒழுங்கு செய்யப்பட்டது.

தற்போது நேசன் வீட்டுக்குச் செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. கணபதிப்பிள்ளை தனது ஜீ.எம்.1212 இலக்கக் காரில் ஏறினார். விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவு (கொழும்பு) பொறுப்பாளர் எனக் கூறியவரும் வாகனத்தின் முன் ஆசனத்தில் ஏறி அமர்ந்துகொண்டார்.

நாரஹேன்பிட்டிக்குச் செல்ல கணபதிப்பிள்ளை தனது காரை வெளியே எடுத்தபோது முன் ஆசனத்தில் இருந்தவர் காரை நிறுத்தும்படி உத்தரவிட்டார். காரில் இருந்தவாறே தனது சகபாடிக்கு சமிக்ஞை மூலம் அழைப்பு விடுத்தார். சகபாடியும் ஓடிவந்து கணபதிப்பிள்ளையின் காரின் பின் ஆசனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்.

வந்தவரின் சகபாடி நின்ற இடத்திற்குச் சற்றுத் தள்ளி அவர்கள் வந்த வான் நிறுத்தப்பட்டிருந்தது. வந்தவர் அந்த வானின் சாரதிக்கும் சமிக்ஞை மூலம் ஏதோ உத்தரவை வழங்கினார். கணபதிப்பிள்ளை ஒன்றும் அறியாதவர்போல் காணப்பட்டார். ஆனால் அந்த வானின் இலக்கத்தை அவர் நினைவுபடுத்தத் தவறவில்லை. அந்த வானின் இல.58-5808.

அந்த வானின் இலக்கத்தை மனப்பாடம் செய்தவாறே கணபதிப்பிள்ளை நாரஹேன்பிட்டிக்குச் சென்று 50 ஆயிரம் ரூபாவைப் பெற்று, வந்தவரிடம் கையளித்தார்.

விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனக் கூறிய அவர்கள் இருவரும் அந்தப் பணத்துடன் கணபதிப்பிள்ளையின் காரிலேயே வந்து நாரஹேன்பிட்டியின் மத்தியில் இறங்கினர்.

கணபதிப்பிள்ளை தனது காரை கொள்ளுப்பிட்டியிலுள்ள தனது வீடு நோக்கிச் செலுத்தினார்.

ஒருவேளை நடந்த சம்பவம் குறித்து கணபதிப்பிள்ளை பொலீஸில் முறைப்பாட்டை மேற்கொள்ளக்கூடும் என்ற சந்தேகம் விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவினர் எனக் கூறியோருக்கு எழுந்தது. அவர்கள் இருவரும் ஒரு 'ஓட்டோவில்' ஏறி கணபதிப்பிள்ளையின் வீடுவரை பின் தொடர்ந்தனர்.

இதுவரை இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்தும் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் எனக் கூறிய இருவரும் 22.04.2002 மாலை மீண்டும் கணபதிப்பிள்ளையுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டனர். மிகுதித் தொகையைத் தயார் செய்யுமாறும், ஒரே தடவையில் செலுத்தமுடியாவிட்டால் பகுதிபகுதியாகத் தருமாறும் தெரிவித்தனர்.

இவ்விதமாக அவர்கள் தொலைபேசியில் பணத்தைச் செலுத்துமாறு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்தனர்.

அவர்களின் நச்சரிப்புகளைக் கணபதிப்பிள்ளையால் தாங்கவே முடியவில்லை. இந்த விடயத்தை கொட்டாஞ்சேனையில் அவரது 'லொட்ஜில்' உள்ள நண்பரிடம் தெரிவித்தார். கணபதிப்பிள்ளையின் சிக்கலை விடுவிப்பது என அவரது நண்பர் முடிவெடுத்தார்.

கணபதிப்பிள்ளையின் நண்பருக்கு கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சப் - இன்ஸ்பெக்டர் றோஹண அதிகாரியை நன்கு பழக்கம். இதுபற்றி அவர் றோஹண அதிகாரிக்குத் தெரிவித்தார்.

### திட்டம் தயார்

றோஹண அதிகாரி இது குறித்து கொழும்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே, புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பான மூத்த பொலீஸ் அத்தியட்சகர் ஏ.லெவன்கம, கொழும்பு மத்திக்குப் பொறுப்பான மூத்த பொலீஸ் அத்தியட்சகர் எச்.எஸ்.தயானந்தா, உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.ஏ.பியரத்ன மற்றும் கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன அத்துக்கோறள ஆகியோருக்கு அறிவித்து, விடுதலைப் புலிகள் எனக் கூறிக் கப்பம் பெறுவோரைக் கைது செய்வதற்கான திட்டத்தைத் தயாரித்தார்.

கணபதிப்பிள்ளையின் நண்பர் மூலம் கப்பம் பெறுவோர் பயன்படுத்தும் வாகனத்தின் இலக்கத்தைப் பொலீஸார் பெற்றுக்கொண்டனர். மோட்டார் வாகனப் பதிவாளர் திணைக்களத்தில் அந்த வானின் சொந்தக்காரர் யார் என்பது பொலீஸாரால் கண்டறியப்பட்டது. கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியைச் சேர்ந்த சார்ள்ஸ் என்ற தமிழருக்குச் சொந்தமானதே அந்த வாகனம் எனத் தெரியவந்தது.

கப்பம் பெறுபவர்கள் பணத்தைத் தருமாறு கணபதிப்பிள்ளையைத் தொடர்ந்தும் நச்சரித்துக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் கணபதிப்பிள்ளையின் நண்பர் பொலீஸாரால் அழைக்கப்பட்டார்.

ஏப்ரல் 24ஆம் திகதி மாலையில் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகே கப்பக்காரரின் வேண்டுகோளின்படி 50ஆயிரம் ரூபா தருவதாக கப்பக்காரர்களுக்குத் தெரிவிக்கும்படி பொலீஸார் அவரிடம் தெரிவித்தனர்.

கணபதிப்பிள்ளை தனது பிள்ளைகளுக்கு எதுவும் நடக்கலாம் என அஞ்சியதால் இந்தப் பணக்கொடுப்பனவுகள் குறித்து பொலீஸாருக்குத் தெரிவிக்கவில்லை. அவரது நண்பனின் முயற்சியால் கப்பக்காரர்களுக்கு வலைவிரிக்கப்பட்டுள்ளது என்பதையும் கணபதிப்பிள்ளை அறிந்திருக்கவில்லை.

நண்பனின் வேண்டுகோளின்படி 24.02.2002 மாலை கொச்சிக்கடைத் தேவாலயத்துக்கு அருகே வந்து பணத்தைப் பெறுமாறு கணபதிப்பிள்ளை கப்பக்காரர்களுக்கு அறிவித்தார்.

24ஆம் திகதி காலையே சிவில் உடை தரித்த பொலீஸார் கொச்சிக்கடைத் தேவாலயத்துக்கு அருகே வந்துசேர்ந்தனர்.

சப்-இன்ஸ்பெக்ரர் டி.எம். மைத்திரி, தேவாலயத்திற்கு அருகே நிறுத்தப் பட்டிருந்த ஓட்டோ ஒன்றுக்குள் இருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

தேவாலயத்துக்கு அருகே துறைமுகத்திற்குச் செல்லும் நுழைவாசலுக்கு அருகில் துறைமுகத்திற்கு செல்பவர்கள் அணிவரிசையில் நிற்கும் இடத்தில் சப்-இன்ஸ்பெக்ரர் றோஹண அதிகாரி நின்றுகொண்டிருந்தார். பொலீஸ் சார்ஜன் ஆனந்தா (29884) தேவாலயத்திற்கு அருகே உள்ள வீதியில் அங்கும் இங்கும் சென்றுகொண்டிருந்தார். பொலீஸ் சாரதியான காமினி(2329) மற்றும் ஜயந்த(36349) ஆகியோர் தேவாலயத்துக்கு முன்னாலுள்ள கற்சுவரில் வேலையற்ற வீணர்போல் இருந்தனர். கணபதிப்பிள்ளை தனது காரைச் செலுத்திவந்து தேவாலயத்துக்கு அருகே உள்ள வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தினார்.

அதைத் தொடர்ந்து 58 - 5808 இலக்க வான் வந்து வாகனத்தரிப்பிடத்தில் கணபதிப்பிள்ளையின் காரருகே வந்து நிறுத்தப்பட்டது.

வானின் முன் ஆசனத்தில் இருந்தவருக்கும் கணபதிப்பிள்ளைக்கும் இடையே உரையாடல் இடம்பெற்றது. கணபதிப்பிள்ளை தனது கையில் இருந்த பணப்பையை வானின் முன் ஆசனத்தில் இருந்தவரிடம் கையளித்தார்.

இதுவரை இவற்றை கழுகுக் கண்களுடன் கவனித்துக்கொண்டிருந்த பொலீஸார் திடீரெனச் செயலில் இறங்கினர். வான் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அப்போது வானின் சாரதியும் கணபதிப்பிள்ளை வீட்டிற்கு முதன் முதலாகச் சென்றபோது வீட்டின் வெளியே மதிலுடன் சாய்ந்துகொண்டு நின்றவரும் மாத்திரமே இருந்தனர்.

பொலீஸார் அந்த சந்தேக நபர்கள் இருவரையும் வானையும் கொட்டாஞ்சேனைப் பொலீஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பொலீஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர்(கொழும்பு) எனக் கூறியவர் மருதானையில் பொறளை வீதியில் உள்ள 'லொட்ஜ்' ஒன்றில் தங்கியிருப்பவர் என்ற தகவல் கிடைத்தது.

சந்தேக நபரின் தகவலை அடுத்து உடனடியாக செயற்பட்ட பொலீஸார் குறித்த 'லொட்ஜ்'சை சுற்றிவளைத்தனர்.

போலி நிதிப் பொறுப்பாளர் அங்கு வைத்து கைதுசெய்யப்பட்டார். அவரது அறையில் 35ஆயிரம் ரூபாப் பணம் ஒரு லட்சத்து 55ஆயிரம் ரூபா பெறுமதியான இரு காசோலைகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் சுரேஷ் எனத் தெரிவித்த நபர் யாழ்ப்பாணம் மவுண்ட் கார்மல் வீதியைச் சேர்ந்த ஜோன்சன் டட்லி எனத் தெரிவித்துள்ளார். அவரது சகாவான மற்ற சந்தேக நபர் வவுனியா கோவில் குளத்தைச் சேர்ந்த நடராஜா மகேஸ்வரன் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வானின் சாரதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராம்.

அந்த வானை கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியைச் சேர்ந்த வானின் சொந்தக்காரரிடம் இருந்து இவர்கள் கூலிக்கு அமர்த்தியுள்ளனர் எனத் தெரியவந்தது.

★



**கிளிநொச்சி, வட்டக்கச்சி மாவடி அம்மன் ஆலயத்தின் அருகேயுள்ள (புழுதி ஆற்றுக்குக் குறுக்காக அமைந்துள்ளது) புராதன அணைக்கட்டுப் பகுதியில் இருந்து சுடுமண் யானை உருவங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை மேலேயுள்ள படங்களில் காண்கிறீர்கள்.**

**புதைபொருள் ஆர்வலரான என்.குணரட்ணம் வட்டக்கச்சி மக்களின் உதவியுடன் மேற்கொண்ட ஆய்வு முயற்சியின் போது சுமார் மூன்று அடி ஆழத்தில் இருந்து சிதைவுற்ற நிலையில் மேற்படி சுடுமண் யானை உருவங்கள் மீட்கப்பட்டுள்ளன.**

*(படங்கள்: நெடுங்கேணியூரான்)*

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண சேவை

1968 ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றம் அற்றவர், விசாகம் நட்சத்திரம், நோர்வேயில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. வந்து கூட்டிச் செல்வார். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3600)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்கத்தில் உயர் பதவியிலுள்ள, பொது நிறமுடைய பூரநட்சத்திர, பாவம் குறைந்த, 29 வயதுடைய அழகிய பெண்ணுக்கு அரச சேவையில் உள்ள பட்டதாரி அல்லது பட்டதாரிக்கு சமமான மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1513, மே/பா உதயன். (3595)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் முட்டாசுக் கடைச் சந்திக்கு அருகாக சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்குண்டு. விவரங்களுக்கு: இல.10, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்(தரகர்தேவையில்லை).(3545)

### தேவை

Broiler இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை தரப்படும். உடன் தொடர்புகொள்ளவும் தனபாலசிங்கம், இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3566)

### விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொடிகள், மீன்தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுசாதன பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (3571)

நல்ல நிலையிலுள்ள ரியூட்டரி வாங்கு, மேசைகள், லாச்சி மேசைகள், கண்ணாடி சோக்கேஸ், சிங்கிள்பெட், ஸ்பிறிங் பெட், SISIL 60 குளிர்சாதனப்பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: P.தேவகுமார், மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (3594)

## பண்டத்தரிப்பில் குணமாக்கல் வழிபாடு இன்று

யாழ்ப்பாணம்,மே10

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை யாத்திரைத்தல வருடாந்தப் பெருவிழா இப்பொழுது நடைபெற்று வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30மணிக்கு குணமாக்கல் வழிபாடு இடம்பெறும். இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் அருட்தந்தை லூர்த்து ராஜா அடிகளார் குணமாக்கல் வழிபாடுகளை நடத்துவார்.(க)

## விபத்தில் சிக்கிய வயோதிபர் மரணமானார்

தென்மராட்சி,மே10

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் கடந்த மார்ச் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்றுக் கொண்டு திரும்பிய வேளையில் மணல் ஏற்றி வந்த லொறியினால் மோதுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த வயோதிபர் நேற்றுமுன்தினம் மரணமானார்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஆழ்வான் கட்டையன் (வயது 75) என்னும் வயோதிபரே மரணமானவராவார்.

லொறி மோதியதில் இந்த வயோதிபரின் வலது கால் துண்டிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-117)

## நாவற்குழியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

கைதடி,மே10

நாவற்குழியில் அமைந்துள்ள ஐந்நூறு வீட்டுக் குடியேற்றத் திட்டத்தில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கதவுகள், ஓடுகள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இவ்வாறு திருடப்பட்டு வலிகாமம பகுதிக்கு எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

மேற்படி பகுதியில் மக்கள் மீளக்குடியமர படையினர் இதுவரை அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-ரி-13)

## சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கல்வியங்காடு, மே10

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையின் ஏற்பாட்டில், எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முத்திரைச் சந்தைப் பகுதியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர் மூலவளநிலையத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடை பெறவுள்ளது.

உணவுவிடுதிகள், பேக்கறிகள், ஐஸ்கிறீம்சாலைகள் என்பவற்றின் உரிமையாளர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வர். (எ-ரி)

## அழைப்புக்கட்டளை

**இல.16 பிரிவு 55 (1)**

[illegible] என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில

**விசுவலிங்கம் அறிவழகன்,**
பாடசாலை வீதி,
கோண்டாவில்.

வழக்கு இல. மணநீக்கம் / 299 எதிர் வழக்காளி

**சிவஞானசுந்தரம் கலாநிதி,**
**தில்லையம்புலம்,**
துன்னாலை தெற்கு,
துன்னாலை.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி / எதிராளி/க்கு

**மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி**

**மணநீக்கம் கோரி**

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2002ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17ஆந் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

*(க.அரியநாயகம்)*
*வழக்காளியின் சட்டத்தரணி*
*வரைவு*

*நீதிமன்றக் கட்டளைப்படி*
து.சிறீமோகன்
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

*குறிப்பு:* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
*(கையொப்பம்) பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.* (3597)

**2002ஆம் ஆண்டு வைகாசி மாதம் 09ஆந் நாளாகிய இன்று**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
10 - 03 - 1934



உதிர்வு
10 - 04 - 2002

## கறுவல் கிருஷ்ணன்

**இன்று (10.05.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள்.*
*பேரப்பிள்ளைகள், மருமக்கள்.*
கி.கனகரட்டினம் *(மகன்)*

*பாரதிபுலம்,*
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (3601)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு நல்லதம்பி (குஞ்சையா - கிளாக்கர்)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு-நல்லதம்பி அவர்கள் 09-05-2002 அன்று வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குமணன் (கனடா), பார்த்திபன் (பிரான்ஸ்), ஆதிரை (ஆசிரியை - மீசாலை வீரசிங்கம் ம.வி.), சுபத்திரை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜான்சிராணி, ஜயந்தா, சர்வேந்திரன், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தனன், அஸ்வதி, கெவின், பானுஷன், பிருந்தாபன், கோபிகிருஸ்ணா, கௌசிகா, கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-05-2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ்.ஆர்.சர்வேந்திரன்
(மருமகன்)

வேம்பிராய்,
மீசாலை வடக்கு, மீசாலை. (3606)

## இந்தியா பொறுத்திருந்து பார்ப்பதுதான் நல்லது

### இப்படிக் கூறுகிறார் குஜ்ரால்

கொழும்பு,மே10

இலங்கையில் பிரச்சினை தீர்ந்து, சமாதானம் ஏற்பட்டால் இந்தியா கூடுதலான பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற உணர்வுடன் இருக்கும். மற்றப்படி இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா எத்தகைய பங்கையும் வகிக்க இடமில்லை. இன்றைய நிலையில் என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கும் கொள்கையை அனுஷ்டிப்பதே நல்லது.

மேற்கண்டவாறு இந்தியாவின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்தார்.

தெற்காசியர்களின் மனித உரிமைகளில் ஆர்வம் கொண்டவர்களின் இரண்டு நாள் கூட்டம் கொழும்பில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பிரசித்திபெற்ற தெற்காசிய மனித உரிமைகள் ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர். அவர்களில் குஜ்ராலும் ஒருவர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்கள் அனைவரும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவு தெரிவித்தனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் குஜ்ரால் இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக அண்டை நாடான இந்தியாவின் நிலை பற்றி தமது கருத்தைத் தெரிவித்தார்.

இதில் இந்தியா வகிப்பதற்கு பங்கு ஏதுமில்லை. இன்றைய நிலையில் இலங்கையில் என்ன நடக்கிறது என்று இந்தியா பொறுத்திருந்து பார்ப்பதே நல்லது என்று தமக்குத் தோன்றுகிறது என்றார். (க)

## வாசகர் திருமுகம்

### இறக்கும்போது வீடுதான் இல்லாவிட்டாலும் கடனாவது இல்லாது இறக்க வேண்டாமா?

இந்த நாட்டிலே பல்வேறு தேவைகளுக்காக, பல்வேறு தாபனங்கள் பொதுமக்களுக்கு கடனுதவி வழங்கிவருவது நாமறிந்ததே. இந்த நோக்கத்தின் ஓர் அலகாகவே வீடமைப்புத் திணைக்களத்தால் வீடுகள் கட்டுவதற்கு உறுதிப்பிணை மூலமும், ஆட்பிணை மூலமும் கடந்த காலங்களில் கடன்கள் வழங்கப்பட்டன.

இயற்கை அழிவுகளான வெள்ளம், புயல், வரட்சி என்னும் பல்வேறு அரசியல் இலாபங்களுக்காகவும் தென் இலங்கையில் வெவ்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன்கள் காலத்துக்குக் காலம் ரத்துச் (waveoff) செய்யப்படுகின்றன. ஆனால் வட இலங்கையில் செயற்கையாக அழிக்கப்பட்ட வீடுகளுக்கு அவற்றை நிர்மாணிக்கும் பொருட்டு வழங்கப்பட்ட கடன்களை வட்டியும் முதலுமாகத் திருப்பிச் செலுத்தும்படி அடிக்கடி வீடமைப்புத் திணைக்களத்தால் - தற்போதைய வீடமைப்பு அதிகார சபையால் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததற்குச் சமனாகிறது.

இதனால் கட்டிய வீடுதான் இல்லாவிட்டாலும், பெற்றகடன் ரத்துச் செய்யப்பட்டு - உறுதிகளை மீளப் பெற்று இறக்கும்போதாவது கடனில்லாது இறப்போமாவென கடன்பட்ட ஆயிரக்கணக்கான அகதியான மக்கள ஏங்கி நிற்கிறார்கள்.

இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசியல் பிரமுகர்களும் ஆவன செய்வார்களா?

யாழ்ப்பாணம் **ஐ.திருநாவுக்கரசு**

### இந்தக் கூட்டத்தை அடக்குவது யார்?

சில தினங்களுக்கு முன்னர் வெடிகொளுத்தும் போக்கிரிக் கூட்டத்தின் செய்தியை உதயனில் படித்தேன். எங்கள் ஊரிலும் அதேபோன்ற ஒரு கூட்டம் இருந்து வருகிறது.

பாண்டியந்தாழ்வு - கொழும்புத்துறை வீதியில் உள்ள சந்தானமாதா ஆலயத்திற்கு முன்பாகத் தினமும் கூடும் இந்தக் கூட்டம் செய்யும் அட்டகாசங்கள் சொல்லில் அடங்காதவை.

நடுவீதியில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு செய்தல், வெடி கொளுத்தி வீதியில் போடுதல், பேணிக்குள் வைத்து வெடி கொளுத்துதல், வீதியால் செல்பவர்களுக்கு வெடி கொளுத்திப் போடுதல், அயலவர்களுடன் முரண்படுதல், பெண்கள், பெரியோர்களைத் தகாத வார்த்தைகளால் ஏசுதல் போன்ற அடாவடித்தனங்களில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இந்தப் பகுதியில் குடியிருப்பவர்கள் மாலை 6 மணிக்கு மேல் வீதிக்கு வரத் தயங்குகின்றார்கள். வியாபார நிறுவனங்களுக்கு இந்த நேரத்திற்குப் பின்னர் யாரும் செல்வதில்லை. இப்படிப் பல வழிகளிலும் பலரும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஓர் இனத்திற்கு பண்பாடு என்பது உயிரினும் மேலானதாகும். பணபாடு அழிந்தால் அந்த இனம் அழிந்ததற்கு ஒப்பானதாகும். அப்படியாயின் நாங்கள் அழிவின் விளிம்பில் நிற்கின்றோமா? எங்களைக் காக்க வந்த எமது பிரதிநிதிகள் இவ்வாறான சீரழிவுகள் குறித்து நடவடிக்கை எடுப்பார்களா? அவர்களுக்கே இந்த மடல் சமர்ப்பணம்.

பாண்டியன்தாழ்வு **'நல்லவன்.'**

### செயலகம் பளைக்கே போனால் நாங்கள் யாரிடம் போவது?

2000ஆம் ஆண்டு ஏப்ரல் இடம்பெயர்வைத் தொடர்ந்து சங்கானையில் 2 மாதங்கள் இயங்கிய பளைப் பிரதேச செயலகமானது, பின்னர் பொதுமக்களின் வேண்டுதலின் பெயரில் இரண்டாகப் பிரிந்து - வடமராட்சி, வலி.கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்வோர் வசதிகருதி புலோலியிலும், வலிகாமத்திலும், தீவகத்திலும்' வசிப்போர் நலன்கருதி யாழ். நகரிலும் இயங்கி வந்தது.

தற்போது ஏ-9 வீதி பாவனைக்கு வந்ததை அடுத்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் முற்றுமுழுதாக பளைப் பகுதியில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வலிகாமம், வடமராட்சி, தீவகம் போன்ற 3 இடங்களிலும் தொடர்ந்து இடம்பெயர்ந்து தங்கிவாழும் பளைப் பிரதேச செயலக மொத்தச் சனத்தொகையில் 95 வீதமானவர்கள் தமது அலுவல்களுக்காக பளைக்கு-பல சிரமங்களுக்கு மத்தியில் ஒரு நாளை அதற்கென ஒதுக்கி சிரமப்பட்டு சென்றுவர வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஏனெனில், அவர்களில் பலரது வீடுகளும் ஒன்றில் தரைமட்டமாகவோ, அல்லது வானம் பார்த்த கூரையாகவோ காட்சி தருவதால் உடனடியாக குடியமரமுடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலையில் வாரத்தில் 5 நாள்களும் பளையிலேயே பிரதேச செயலகத்தை இயக்கி பொதுமக்களுக்கு தர்மசங்கடமான நிலையை அரச அதிகாரிகளும் பொதுநிர்வாகத்துறையினரும் ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறைந்தது செவ்வாய்க்கிழமை வடமராட்சியிலும், வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலும் என 2 நாள்கள் முன்னர் இயங்கிய இடங்களில் பிரதேச செயலகத்தை இயக்கி ஏனைய 3 நாள்கள் பளையில் இயக்கினால் சிறப்பாக இருக்கும் என்பது பல பொதுமக்களின் அபிப்பிராயமாகும்.

பளை **செல்வன்.**

உதயன்

## ஜனாதிபதிதான் பதில் சொல்லவேண்டும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையில் சிறுவர் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் ஆரம்ப உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி அமெரிக்கா சென்றார்.

அங்கிருந்துதான் சீ.என்.என். தொலைக்காட்சி மூலம் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை உலகம் முழுவதற்கும் அறிவித்தார்.

சீ.என்.என். தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி அளித்த பேட்டியில் அவர் முக்கியமாகக் கூறிய கருத்து இது.

"நாடு பிளவுபடாமல் ஒற்றை ஆட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகள் சம்மதிக்கவேண்டும். அவர்கள் ஆயுதங்களைக் கைவிடாவிட்டாலும் வன்செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்று பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். இவற்றைச் செய்தால்தான் இன்றைய சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்க முடியும்."

ஜனாதிபதி இப்படிக் கூறியதன் உட்பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும். அர்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும்.

வேறு ஒன்றும் இல்லை. சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவு கிடைக்காது என்பதைத்தான் ஜனாதிபதி இப்படிப் பூடகமாகத் தெரிவித்திருக்கிறார். அந்தோ, அவர் எல்லாவற்றையும் குழப்பியடிக்கப் பார்க்கிறாரே என்று விஷயம் அறிந்தவர்கள் கலங்குகிறார்கள்.

புலிகள் தாம் வன்செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்று பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்கிறார் ஜனாதிபதி. இதில் புதிதாக அவர்கள் அறிவிக்க என்ன இருக்கிறது? வன்செயல்களில் ஈடுபடுவதில்லை என்று ஒப்புக்கொண்டுதான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புலிகள் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். அதன்படி எங்கேயும் வன்செயல்களில் ஈடுபடாமல் உண்மையாக நடந்து கொண்டு வருகிறார்கள்.

மற்றையது, இலங்கை பிளவுபடக்கூடாது என்பது. இதிலும் பிரச்சினை இல்லை. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். தமிழீழம் தனியாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தவில்லை. இலங்கைக் கூட்டமைப்பில் தமிழீழம் தன்னாட்சி நடத்திக்கொண்டு இணைந்திருக்கலாம். இதில் புலிகளுக்கு ஆட்சேபனை இல்லை.

ஆகவே நாட்டுப்பிளவு, பிரிவினை என்ற பேச்சுக்களுக்கு இடமில்லை.

அடுத்தது ஜனாதிபதி கூறிய ஒற்றையாட்சி முறை. அந்த ஆட்சிமுறை தொடர்ந்திருக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி.

ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு அர்த்த புஷ்டியான தன்னாட்சி கிடைக்காது. அவர்களுடைய அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படமாட்டா. இது புலிகளின் கருத்து மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளடங்கலான தமிழ்த் தேசிய முன்னணி மற்றும் பல தமிழ்க் கட்சிகளின் திடமான நம்பிக்கையாகும்.

புலிகள் இயக்கம் மற்றும் முன்னர் ஆயுதப் போராட்டம் நடத்திய குழுக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி முதலான சகல தமிழ்க் கட்சிகளும் திம்புவில் கூடிச் செய்த முடிவுப்படி தமிழினம் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும். தமிழினத்துக்கு வடக்கு - கிழக்கு தாயகம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். தமிழ்த் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை இருக்கவேண்டும்.

இந்த மூன்று விடயங்களையும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் வருடம் தோறும் தாம் நிகழ்த்தி வரும் பிரசித்திபெற்ற மாவீரர் தின உரைகளில் வற்புறுத்தி வருகிறார்.

தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் சுயநிர்ணய உரிமை - இந்த மூன்றிற்கும் ஒற்றையாட்சியில் இடமில்லை. அதனால் எவ்வளவு காலம், எத்தனை பேச்சுக்களை நடத்தினாலும் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி திட்டத்தின்கீழ் தீர்வு காணப் புலிகள் சம்மதிப்பார்களா? நடக்காது.

அதைத் தெரிந்து கொண்டதனால்தான் ஜனாதிபதி இப்படி ஒரு போடு போட்டிருக்கிறார்.

பேச்சில் பிரச்சினைக்கு தீர்வு இல்லையென்றால் அடுத்து என்ன? மீண்டும் போர்தானே! அதைத்தான் ஜனாதிபதி விரும்புகிறாரா?

பத்தொன்பது வருடப் போரினால் இதுவரை ஏற்பட்ட உயிரிழப்புக்கள், அழிவுகள், அவலங்கள் போதாதா? ஜனாதிபதிதான் பதில் சொல்லவேண்டும்.

### மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும்

# தொண்டர் ஆசிரியர்களுடன் நேற்று புலிகளின் அரசியல்துறையினர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே10

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொண்டர் ஆசிரியர் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் நேற்றுக் கலந்துரையாடினார்கள்.

நேற்றுப் பகல் 10மணியளவில் யாழ்.கல்வி வலயப் பகுதிக்கு வந்த அவர்கள், மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு வருவோரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் நியாயமான போராட்டத்துக்கு தமது ஆதரவு எப்போதும் உண்டு எனவும் அவர்களிடம் தெரிவித்தனர்.

இவர்களின் போராட்டம் எட்டாவது நாளாக நேற்றும் இடம் பெற்றது.

இதேவேளை -

கடந்த ஆறு தினங்களாக கூட்டுறவுத் திணைக்களத்தின் முன்பாக இடம்பெற்றுவந்த உதவிக் கணக்காய்வாளர்களின் மறியற்போராட்டம் நேற்று இடம்பெறவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருடன் தமது பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களின் பலனாகவும் அமைச்சரவை மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்தும் நேற்று மாலையுடன் தமது போராட்டம் இடைநிறுத்தப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (க-10-ரி)

## பளை மக்களுக்கு கிணறுகள் இறைத்துக் கொடுக்கப்படும்

### பிரதேச செயலகத்தை நாடுங்கள்

தென்மராட்சி,மே10

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் பகுதிகளில் கிணறுகள் இறைத்துக் கொடுக்கும் பணியினை பளைப் பிரதேச சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கென இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்களை யாழ். மாவட்ட கமநல சேவைகள் நிலையத்திடமிருநது பெறப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் வேநவரத்தினம் தெரிவித்தார்.

கிணறுகள் இறைக்க விரும்பும் குடியிருப்பாளர்கள் பளை நகர்ப்பகுதியில் உள்ள அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவித்தார்.

இதேவேளை, பற்றைக் காடாகக் காணப்படும் பளை நகர்ப் பகுதியை துப்புரவு செய்யும் பணிகளையும் பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (க-117)

## மருதனார்மடம் சந்தையின் நிர்மாணப் பணிகள் துரிதம்

மருதனார்மடம் பொதுச் சந்தைக்கான புதிய கட்டட நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மேற்படி சந்தையின் தெற்குப்புறம் விஸ்தரிக்கப்பட்டு நவீன முறையில் சந்தையை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுநிதி ஒதுக்கீட்டின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் இந்தச் சந்தையின் புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

போதிய கட்டட வசதிகள் இல்லாமையால் மாரி காலங்களில் மருதனார்மடம் சந்தையில் வியாபாரிகளும் பொது மக்களும் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

புதிய கட்டடவேலைகள் பூர்த்தியானதும் சகல வசதிகளையும் கொண்ட நவீன சந்தையாக இது விளங்கும். (க-152)

### காற்றோட்டம் இல்லை; வெளிச்ச வசதியும் இல்லை

# மிகமோசமான நிலையில் காணப்படும் சுன்னாகம் தபாலக ஊழியர்கள் சிரமம்

### இந்த நிலைமை எப்போது மாறுமோ?

வலிகாமம் தெற்கு,மே10

தரமான கட்டட வசதிகளோ காற்றோட்ட வெளிச்ச வசதிகளோ இன்றி செயற்பட்டு வரும் சுன்னாகம் தபாலகத்தில் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அங்குள்ள ஊழியர்கள் வேலை செய்து வருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் தபால் நிலையத்துக்கு அடுத்ததாக குடாநாட்டிலுள்ள ஏனைய தபாலகங்களை விட சுன்னாகம் தபாலகமே அதிகமான தபாலக தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளதாகும்.

தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வலிகாமம் பிரதேசங்களுக்கு கேந்திர தபால்நிலையமாகவும் விளங்குகின்றது.

மக்கள் மீளக்குடியமர்ந்து ஆறு வருடங்களாகியும் வசதிகள் அற்ற தபாலகமாகவே இது செயற்பட்டு வருகிறது.

ஷெல் வீச்சுக்களுக்கு இலக்காகி பழுதடைந்த கட்டடம் ஒன்றிலே தபாலகத்துக்குரிய கட்டட அமைப்பு எதுவும் இன்றி காணப்படுகிறது.

தபாலகம் ஒடுக்கமான கட்டடம் ஒன்றில் இயங்குவதால் போதிய காற்றோட்ட வசதிகளோ வெளிச்ச வசதிகளோ இல்லை. அங்கு பணிபுரியும் ஊழியர்கள் கஷ்டமான நிலையில் வேலை செய்து வருகின்றார்கள். இக்குறைபாடுகள் எல்லாம் நீங்கி சகல வசதிகளையும் கொண்ட தபாலகத்தை அமைத்துத் தரவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-152)

## மத்திய மாகாண சபையின் 3அமைச்சர்கள் பதவியேற்பு

### ஆளுநர் தழுதழுத்தபடி உரையாற்றினார்

கண்டி,மே10

மத்திய மாகாண சபையின் புதிய அமைச்சர்களாக மூவர் நேற்றுமுன்தினம் காலை ஆளுநர் கே.பி.ரத்னாயக்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றனர். வே.இராதாகிருஷ்ணன், கல்வி, சமூக சேவைகள், கைத்தொழில், தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும், சாலிய திஸாநாயக்க சுகாதார சிறுவர் பராமரிப்பு, மகளிர் விவகார கிராம அபி விருத்தி விளையாட்டு அமைச்சராகவும், வஸந்த அலுவிகாரை போக்குவரத்து, உல்லாசப் பயணத்துறை அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்தனர். அமைச்சர் ராதாகிருஷ்ணன் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கண்டியில் உள்ள ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த பதவியேற்பு வைபவத்தில் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர் எவரும் பிரசன்னமாகியிருக்க வில்லை. சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த லால் விஜய நாயக்க மாத்திரமே கலந்துகொண்டார்.

பதவியேற்றபின்னர் ஆளுநர் அழுத நிலையில் தழுதழுத்த குரலிலும் தேம்பித்தேம்பி உரையாற்றினார்.

நான் சுகவீனமுற்றிருக்கிறேன். இங்கு குழுமி இருக்கும் அனைத்து மக்களின் ஒத்துழைப்புடனும் சபையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச்செல்ல உதவவேண்டும். நாம் மொழியால் வேறுபட்டவர்கள். ஆனால், யாழ்.ஹாட்லிக் கல்லூரியில் தமிழைக் கற்ற நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த வைபவத்தில் கலந்துகொண்டேன். சபையின் நிர்வாகம் மீண்டும் இயல்பு நிலைக்கு வந்தமை குறித்து திருப்தி அடைகிறேன் என்றார்.

இந்த வைபவத்தில் முதலமைச்சர் டபிள்யூ.பீ.பீ.திஸநாயக்காவும் உரையாற்றினார். (க)

### நாளை

சித்திரை 28
சனிக்கிழமை
(11.05.2002)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 3.46 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 1.10 வரை
சுபநேரம் : 2.54 - 4.24
ராகுகாலம்: 8.54 - 10.24
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஓர் ஆடு சிக்கினால், ராஜதந்திரிகள் அதன் உரோமத்தை மட்டும் கத்தரித்துக் கொள்வர். ஆனால் அரசியல்வாதிகள், அதன் தோலையே உரித்துவிடுவர்.




முகமாலையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதியில் காணப்படும் காவலரண் இது. அங்கு L.T.T.E. என்ற எழுத்துக்கள் 'பளிச்'சென பொறிக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காண்கிறீர்கள். *(படம்: தேவராஜன்)*

## சமுர்த்தி அலுவலரின் கணக்கெடுப்பு நிவாரணம் தொடர்பானது அல்ல!

### வெட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை!!

யாழ்ப்பாணம்,மே10

சமுர்த்தி அலுவலகர்களால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான கணக்கெடுப்புக்கும் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களாக குடாநாட்டில் இடம்பெயர்ந்து வசித்துவரும் மக்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றன. இப்பதிவுகளை யு.என்.எச்.சி.ஆர். அமைப்பும், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இதுபோன்ற பதிவுகள் தமிழ்மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே இப்பதிவுக்கும் நிவாரணக் குறைப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் மக்கள் தொடர்ந்தும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10)

## மெய்வன்மை கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே10

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவிருகின்றார்கள்.

இவர்கள் மெய்வன்மைச் சட்ட விதிகள் பற்றிய விரிவுரைகளை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளார்கள்.

இக்கருத்தரங்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும். ஆர்வமுள்ள சகலரையும் கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறு யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் கேட்டுள்ளது. (க)

## வேண்டாம் இங்கே கள்ளுத் தவறணை! ஊர்மக்கள் ஒருமித்து எதிர்ப்பு!!

சண்டிலிப்பாயில், சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து சங்கானை செல்லும் பிரதான வீதியில் செயற்பட்டு வரும் கள்ளுத் தவறணையை அப்பகுதியிலுள்ள பொது மக்களின் நலன்கருதி அங்கிருந்து வேறுஇடத்திற்கு அகற்றுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயம், சண்டிலிப்பாய் ஐயனார் ஆலயம் ஆகியவற்றுக்கு சமீபமாக இந்தக் கள்ளுத்தவறணை இருப்பதாலும், கள் அருந்த வருபவர்களால் அயல் வீடுகளில் வசிப்பவர்களுக்கும், வீதியால் செல்பவர்களுக்கும் உபத்திரவம் ஏற்பட்டு வருவதாலும் இத்தவறணையை வேறு இடத்திற்கு இடம்மாற்றம் செய்யுமாறு இப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கள்ளுத் தவறணையை வேறு இடத்திற்கு இடம்மாற்றம் செய்யுமாறு தவறணையை நடத்திவரும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னர் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என்று இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (க-135)

## சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஐ.தே.கவுக்கு'தாவல்'

கொழும்பு,மே10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஐ.தே.கட்சிக்கு மாறியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைச் செயலாளர்கள் நால்வர் மற்றும் தவிசாளர் ஒருவர் உட்பட 7உறுப்பினர்களும் ஜே.வி.பியின் உறுப்பினர்கள் சிலருமே இவ்வாறு கட்சி தாவியிருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

இவர்களில் பௌத்த தேரர்களும் அடங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-4)

## ஐ.தே.க.அமைப்பாளர் கைதானார்!

கல்முனை,மே10

பத்திரிகை நிறுவனம் ஒன்றின் அம்பாறை மத்திய செய்தியாளர் எஸ்.எல்.எம்.பிக்கீரை கடந்த வாரம் இறக்காமத்தில் வைத்து தாக்கியதாகக் கூறப்படும் ஐ.தே.க. கொத்தணி அமைப்பாளர் தமணை பொலீஸாரால் கடந்த செவ்வாய் கைது செய்யப்பட்டார்.

அக்கரைப்பற்று நீதிவான் எம்.வை.இஷாக்தீன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட அமைப்பாளர் ஏ.எல்.மீராசாய் பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டார். (க)

## தலைக் கவசம் அணியாத 100 பேர் தினமும் பொலீஸ் வலையில் !

மட்டக்களப்பு,மே10

மட்டக்களப்பு மாநகர பிரதேசத்தில் தலைக் கவசம் அணியாத சுமார் 100 மோட்டார் சைக்கிளோட்டிகள் தினமும் போக்குவரத்துப் பொலீஸாரிடம் சிக்குகின்றனர் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தலைக்கவசம் அணியும் நடைமுறை அமுலுக்கு வந்து ஓராண்டாகியும் இன்னும் அதிகமான மோட்டார் சைக்கிளோட்டிகளும், பின்னால் அமர்ந்து செல்வோரும் தலைக்கவசம் இன்றியே செல்கின்றனர்.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோரைக் கண்காணிக்க 15 பொலீஸ் உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு நகரெங்கும் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். தலைக்கவசம் அணியாத சைக்கிளோட்டிகளுக்குப் பொலீஸார் 100 ரூபாவை உடனடித் தண்டமாக விதிக்கின்றனர். (க)


## ராம்கோ சிமெந்து

தரத்தின் சின்னம்! உறுதியின் உத்தரவாதம்!

இலங்கை, இந்தியாவில் பிரசித்திபெற்ற தரமான "ராம்கோ" சிமெந்தினை இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்துள்ளோம்.

கட்டடங்களுக்கு உறுதியளிக்கும் தரமான ராம்கோ சிமெந்தை மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்பும் வியாபாரிகள், கட்டட ஒப்பந்தக்காரர்கள், பாவனையாளர்கள், உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**அம்பிகை களஞ்சியம்**

304 (110), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021-2511.
(3553)



## FORUT - JAFFNA

**Vacancy: Post of Project Co-ordinator (PC)**

There exists a vacancy for the Post of PC at our office in Point Pedro

*Major Responsibilities:*

☆ General administration/Management of the office, including financial management.
☆ Accountable and transparent programme implementation (construction and community development)
☆ Personnel management, including staff development.
☆ Appropriate monitoring and reporting in English.

Applicants must be below the age of 50, with at least A/L, preferably University degree and substantial administration/management experience preferably from related fields.

*Applications must reach:*

**Programme Manager, FORUT,**
***67, Temple Road, Jaffna.***
before 15th May 2002

Women are encouraged to apply,
Only shortlisted candidates will be called for interview.
(3147)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 08 - 1915 | 04 - 05 - 1997 |

### அமரர் நா.சி.நாகலிங்கம்

*(உரிமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், தெல்லிப்பழை – சுன்னாகம்).*

*எங்கள் குலவிளக்கே!*

காற்றினிலே கலந்த உங்கள் உயிர் மூச்சு தினந்தோறும் எங்கள் நெஞ்சினிலே வீற்றிருந்து வீசுகின்றது. பிரிந்தும் பிரியாத உங்கள்நினைவுகளில் நாம் என்றென்றும் வாழ்ந்திடுவோம்!

குடும்பத்தினர்.

*செல்லாச்சி அம்மையார் வீதி,*
*சுன்னாகம்.*
(3548)


## றோணியோ பயிற்சி

றோணியோ வேலை பழக
விரும்பும் பெண்கள் நேரில் வரவும்.

**சாந்தி**
கணனி சார் சேவைகள்
150, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம். (3577)



## தேவை

மருந்தாளர்-PHARMACIST
யாழ்நகரில் உள்ள ஆங்கில
மருந்தக விற்பனை
நிலையத்திற்கு மருந்தாளர்
ஒருவர் தேவை.
தகுதியானவர்கள் உடன்
விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல.:1511
C/o உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(3574)


## 13ஆவது பிறந்ததின வாழ்த்து

10.05.2002



HAPPY BIRTHDAY

### செல்வி கலெக்ஸனா வரதராசா

கைதடி கிழக்கு சந்நிதி இல்லத்தைச் சேர்ந்த செல்வி கலெக்ஸனா வரதராசா தனது 13ஆவது பிறந்த தினத்தை இன்று (10.05.2002) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அண்ணாமார் (லண்டன்), சித்தப்பா குடும்பம் (கைதடி), சித்தப்பா குடும்பம் (லண்டன்) அத்தை-மாமா குடும்பம் (சுவிஸ்), பெரியமாமா குடும்பம் (சுவிஸ்), சின்னமாமா குடும்பம் (பிரான்ஸ் – கைதடி) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் செல்வியை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

**வரதராசா** (அப்பா)

கைதடி கிழக்கு. (C/22053)

## 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | மறைவு |
|---|---|
| 21 - 08 - 1915 | 04 - 05 - 1997 |

### அமரர் நா.சி.நாகலிங்கம்

(உரிமையாளர், நா.சி.நாகலிங்கம் & சன்ஸ்; எரிபொருள் முகவர், சுன்னாகம் - தெல்லிப்பழை.)

திதி: 10.05.2002

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஐந்து ஆனாலும் உங்கள் அன்பு எம்மை விட்டு அகலாது! அன்புக்கும் பாசத்துக்கும் இருப்பிடமாக இருந்து எங்கள் வாழ்க்கைக்கு வழி காட்டிய உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*மனைவி, மக்கள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

*தகவல்: தர்மின் சிவபாலன் (சுவிஸ்).* (22000)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 19 - 04 - 1927 | 11 - 04 - 2002 |

### அமரர் வைரவநாதர் கந்தையா.

*(முன்னாள் முப்படை வீரனும், ஓய்வு பெற்ற CID பொலீஸ் சார்ஜன்ட்டும)*

**பிரிந்தும் பிரியாத மறைந்தும் மறையாத உங்கள் நினைவுகளில் என்றென்றும் வாழ்ந்திடுவோம்...**

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

*மூளாய் வீதி, வட்டு. மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*
*(கண்ணகை அம்மன்கோயிலடி)* (3519)

# மனிதனை நல்வழிப்படுத்தும் சைவ வாழ்வின் போதனைகள்

உயிர்க்குள்ள இயற்கைக் குணங்களுள் துணைவேண்டி நிற்றலுமொன்று. உண்மைத் துணையாம் பொருளை உணர்ந்து அதன் தலைமைக் கீழ் வாழ்க்கை நடத்துஞ் சிறப்பியல்பு மக்களை ஏனைய உயிர்களினின்றும் உயரச் செய்கின்றது. அவ்வுணர்வும் வாழ்வுமே சமயமாகின்றன. அத்துணையே கடவுள் என்னுஞ் செஞ்சொல்லாற் குறிக்கிறோம்.

சிறப்புடை மகன் சிவம் என்னுஞ் செம்பொருளின் தலைமைக் கீழ் ஒழுகும் செம்மையொழுக்கமே சைவ வாழ்வு எனப்படும். உண்மை, வாய்மை, மெய்மையென, செம்மை முத்திறப்படும். உள்ளத்தின் நன்மை உண்மை. சொல்லின் நன்மை வாய்மை. செயலின் நன்மை மெய்மை. அன்பு எண்ணத் தூய்மை, நிறைவு என்பன உண்மையின் உறுப்புக்கள். இறைவனிடத்து ஊறி நிறையுங் காதலும் உயிர்களிடத்து உள்ளுடைந்தோடு மருளும் பொறையும் பணிவும் அன்பின்பாற்படுவன. கேட்டறிகினிதாதலும் உறுதிபயத்தலுமுடைய சொல்லையே யாண்டுங் கூறுதல் வாய்மை. கரத்தலும் தீங்கு விளைத்தலுமின்றிப் பிறவுயிர்க்கு நலமே பயக்குஞ் செயல்களைச் செய்தலு முடற்கண் நோயும் அழுக்குமின்றியிருத்தலும் மெய்மை செம்மையொழுக்கமே அழகு வாழ்வு. செம்மைக் கண் அன்புக்குத் தனிச்சிறப்புண்டு.

பல்வேறு சமயங்களும் தரும் இன்பநிலையினையும் அவ்வின்பத்தையடையும் வழியின் திண்மையையுங்கொண்டே அவற்றின் உயர்வு, தாழ்வுகள் அளக்கப்படுகின்றன. எனினும் அறிவுடை மக்கள் கொண்டொழுகுச் சமயங்களெல்லாம் ஒரே இயல்கிளைவாய உயர்ந்த அடி நிலைகளிற்றான் நிற்கின்றன. அருளுடைமை, கொல்லாமை, வாய்மை முதலாம் உயர் குணங்கள் உயர்ந்த சமயங்கள் பலவற்றைத் தாங்கி நிற்கின்றன. மக்களுடைய அறிவாற்றல்கள் எப்போதும் பலதிறப்பட்டே இருப்பனவாகலின் அவராற் கொள்ளப்படும் சமயங்களும் பலதரப்படுதல் இயல்பே. சைவம் அச்சமயங்களையெல்லாம் தளுவிக்கொண்டு தலைமை எய்தி நிற்கின்றது.

சமய வாழ்வுடையவன் இடையில் இல்லாத உயர்ந்த இன்பத்தை உடையனாதலோடு தன்னுயிரையும் உயர்த்திச் செல்கிறான். இந்த இன்பத்தையும் திருத்தத்தையும் அவன் அயலாரிடத்தும் நிகழ்த்துகிறான். அவன் இறைவனை இருவழியாகத் தழுவுகிறான். ஒன்று தானும் பிற உயிர்களும் நல்வழிப்பட்டு அத்தலைவனிடத்தே அன்பு சிறந்து நிற்கவேண்டும் என்று இரந்து நிற்றல்; மற்றையது, அத்தலைவன் தனக்கும் மற்றெல்லாவுயிர்க்கும் வேண்டிய யாவற்றையும் இயல்பாகவே தந்துநிற்கும் பேரருள் கண்டு அவனிடத்தே காதல் சிறந்து மனம் உருகி நிற்றல். சமயம் கலவாத வாழ்வு துன்பமயமானது. கடவுள் அருளுவான் என்னும் மனவுறுதி ஒன்றே வாழ்க்கையின் இன்னல்களைப் போக்கிவிடும். 'என்னுடைய தவறுகளையும் துன்பங்களையும் இடையூறுகளையும் என்னிறைவன் நக்குவான்; யான் வேண்டிய நிலையை அடைய என்னால் முடியும்; எனக்குத் தீங்கிழைக்க ஒருவராலும் முடியாது' என்றெண்ணும்போது சமய வாழ்வுடையவன் உள்ளம் இறைவனடிக் கீழ் இறுமாந்து நிற்குமன்றோ? ஏனையோர்க்கு சிறு செயலாகவும் வெறுவினையாகவும் தெரிவனவற்றிலும் இறைவன் நின்று தனக்குத் துணைசெய்வதாக அவன் உணருகிறான். ஞாயிற்றின் வெண் கதிர்கள் உடலுள் நுழையும்போது இறைவனின் திருவருட் கதிரே தன்னுள் புகுவதாக உணருகின்றான். சமயக் கொள்கையற்றவன், இறைவனின் உண்மையையும் ஒப்புக்கெள்ளாது அவன் தனக்களித்திருக்கும் தலைமையையும் உணராது தன் மயக்கவுணர்வுக்குப் புலனாகும் பிற போலியேதுக்களையே உலக நிகழ்ச்சிக்குக் காரணமாகக் கொண்டு தாழ்வடைந்து வறுமையெய்தி நிறகிறான். சமயி துன்பங்களினூடேயும் இன்பத்தைக் காணும் அறிவை வளர்க்கிறான். இயற்கைக் காட்சிகளினிடையே இறைவனின் அழகையும் அருளையும் பெருமையையும் கண்டு இன்புறுகிறான். அக்காட்சி அவ்விறைவனிடத்தே காதலைமிகுவித்து நலந்தருகிறது. துன்பப்பட்டுக்கொண்டிருப்பவன் இறைவனை இகழ்ந்து வெறுத்தவனாவான். உண்மையான சமயக் கல்வியை நூல்களால் அடைய முடியாது. சமய வாழ்வு நடத்தும் போதுதான் அதனைப் பெறலாம்.

## ஞானக்கதிர்

மெய்யறிவு உண்மை அழகை நுகர, அழகினுள் உயிராய் நிற்கும் இறைவனை நல்லுயிர் தளுவும்போது பேரின்பம் பிறக்கிறது. அழகு இருவகைத்து; உண்மை உள்ளழகு அதன் புறத்தோற்றம் வெளியழகு. அன்பு, நீதி, ஊக்கம், நிறைவு, பிறர் நலவேட்கை, மெய்மை முதலிய குணங்கள் உள்ளத்தில் உள்ள அழகான ஓவியங்கள். மெய்யறிவு அவற்றைப் புலானாக்கும் ஒளி. உடலும் சொல்லும் செயலும் உள்ளழகை உட்கொண்டிருக்கும் பளிங்கு அல்லது கண்ணாடிகள். நன்மகனிடத்தே இம்மூன்றினூடாகவும் அவனுள்ளழகைக் கண்டு நுகர்ந்து நாம் இன்புறுகிறோம். இன்னும் மேலே சென்றால் மெய்யறிவல்ல, இறைவனென்னும் ஒளிவளர்விளக்கே உளத்தில் நின்றொளிர அக்குணங்கள் பேரழகுடன் பொலிகின்றன எனல் வேண்டும். அப்போது அவை தம்மை உடையானையும் பிறரையும் இன்புறுத்துகின்றன.

இனி, உள்ளழகு இறைவன்: வெளியழகு உலகம். சைவன் இறைவனுக்கு பிற்புறத்தே அவனுக்கூடாக உலகைக் காண்பான். அப்போது அவனுக்கு உலகம் முழுதும் அழகு மயமாய் இருக்கும். அவன் பசிய வெளிகளிலே மாலைக் காலத்து நின்று இவ்வுலகே பொன்னுலகாகத் தானும் சிறிது நேரம் கடவுளரில் ஒருவனாவதாக உணருகிறான். 'சிறிது முன் வற்கென்றிருந்த அந்த முல்லைப்போது கட்டுவிட்டு விடுதலையடைந்து மணம் நிறைந்து தூய்மை



யேயாகி மலர்கின்றதே! அதன் மலர்ச்சி அந்திவானின் தோற்ற மறைவுபோல விரைவாகவும் கட்புலனாகாதும் நிகழ்கின்றதன்றோ? என் தலைவனே மறைந்து நின்று இதனைச் செய்கிறான்.' என்று பெருமையும் அத தலைவனிடத்து வேட்கையு மிக்கு நிற்கிறான். இப்போது எளிய வாழ்வனனாய் அவனுள்ளம் அம் முல்லை மலர்போல மலர்கின்றதன்றோ? ஒன்றுக்கொன்று பொருத்தமுண்மை தான் அழகு. இதற்கிது பொருத்தம் இல்லை என்று நாம் கூறும் குறைபாடு இயற்கையில் இல்லை. இறைவன் நாம் நுகருமாறளித்த அழகு இயற்கைத் தோற்றங்களிலும் வல்லவனது நல்லிசையிலும் குழந்தை களது மழலையிலும் மகளிரது இளமை வனப்பிலும் நின்றுவிடவில்லை. நம்முடைய சூழ்ச்சிகளையெல்லாம் கடந்த துன்பம் அடுக்கி வந்து நம்மை நெருக்கும்போதும் அழகு விளங்குகிறது. தன்னை முழுதும் மறந்து ஒருவன் சினமுதலிய வற்றால் விழுங்கப்பட்டிருக்கும் நிலையிலும் அழகு பொலிகிறது.

அழகனாகிய இறைவன் எங்கும் நிறைந்திருக்கும்போது எங்கும் அழகு புலப்படவேண்டியதே. சைவனது அழகிய உள்ளம் எங்கும் அழகை நுகர்ந்து இன்புறுகின்றது. அவனே உள்ளழகன். அழகே கடவுள்; நமக்கு நேர் நிற்கும் இடம்; அழகே கடவுள்.

அழகும் இன்பமும் அறிவு நிலைக்கேற்ப வேறுபடுவன. அறிவுடைய மகனுக்கின்பமாவன ஈத்துவக்கும் இன்பம், பிறர் மிகைபொறுத்தெய்து இன்பம், பிறவுயிர்க்காகத் தன்னலம் கெடுத்துணரும் இன்பம், புலனடக்கி வெற்றிபெறும் இன்பம், மேலான தலைவனை நினைவுகூர்ந்துகூறும் தன்மையதே. சிலர் கூறுமாறு ஐம்புல வேட்கையை நிறைப்பதும் கல்வியும் பிறவும் மக்களுக்கு இயல்பாக அமைந்தவை எனின் வேண்டப்படுவனே என்று கொள்ளுதல் தவறு. அவ்வின்பங்கள் அறிவிற் குறைந்த விலங்குகட்கே ஏற்றன. சைவனுக்கு புலனடக்கம் மிகவேண்டப்படுவதுண்டு. அவன் பிறவுயிர்களின் நலத்துக்காகவே உடலோம் புதலும் இல்வாழ்தலுஞ்செய்வான்.

சிவம் என்பது எல்லா நலத்தையும் குறித்து நிற்பதொருகடவுட் சொல். எனவே, சைவர் என்னும் போது அவர் எல்லாநலமுடையராதல் வேண்டும் என்பது பெறப்படும். நலம் என்பது அறிவு குணஞ்செயல்களது நலத்தையும் உடல் நலத்தையுமல்லது உலக நலத்தையன்று. உயர்ச்சியும் ஒரு நலம்; சைவர் தமது நிலையில் இருந்து உயர்ந்துஞ்செல்ல வேண்டும். கடவுள், சிவம், அழகு என்பன தமிழ்த்தாயின் மூன்று செல்வங்கள்.

தம்முள் ஒழுக்கநெறி வெவ்வேறாக இருந்தபோதும் ஒரே சமயத்தவரென்று கூறப்படுவாருட் பூசல் விளைவதில்லை. சைவத்துள் பல சமயங்கள் அடங்கியிருத்தல்போல சைவர் எனப்படுவாருட் பிற சமயத்தவர் பலர் இருக்கிறார்கள். கொள்கையும் ஒழுக்கமுமே சமயம்; ஒரு பெயரின் கீழ் நிற்கும் சமயக் கூட்டத்தினருள் பிற சமய ஒழுக்கமுடையாரிருத்தலியல்பே அவ்வாறாகவும், சமயத்தின் பெயர் வேறுபாடுகொண்டு பூசல் விளைப்பதற்கு ஒருவகை மயக்கவுணர்வே காரணமாமன்றோ? வாழ்நாளின் ஒவ்வொரு சிறிய பகுதியும் உயிர்களுக்குத் தொண்டு செய்யவும் தன்னை வழிபடவும் பயன்படவேண்டுமென்பதல்லது சமயப் பூசல் விளைத்துக் காலங்கழிக்கவேண்டுமென்பது இறைவன் குறிப்பன்று. அவ்வாறு செய்பவன் தன் சமய விதியினின்றும் விலகினவனாவான்.

*நன்றி: சிவநெறிச் சிந்தனைத் திரட்டு.*

---

# மந்துவில் பாரதி வித்தியாலயத்திலிருந்து படையினர் வாபஸ் பெற வேண்டும்

## பாடசாலைச் சமூகத்தினர் மகஜர் சமர்ப்பிப்பு

கொடிகாமம்,மே10

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வாபஸ் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி படை அதிகாரிகளிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் சார்பில் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சி இடம்பெயர்வை அடுத்து வடமராட்சி நாவலர் மடத்தில் இயங்கிவந்த மேற்படி பாடசாலையைத் தொடர்ந்தும் அங்கு இயங்க வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, மந்துவில் பகுதியில் பொதுமக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து மாணவர்களின் நன்மைகருதி இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(எ-ரி)

# தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகின்றனர் சிங்கள மாணவர்கள்!


கோப்பாய்,மே10

சமாதானத்திற்கான யாத்திரையை மேற்கொண்டு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த சிங்கள மாணவர்களும் விரிவுரையாளர்களும் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தரவுள்ளனர்.

மூன்று நாள் யாத்திரையை மேற்கொண்டு வரும் இக்குழுவில் 75 மாணவர்களும் விரிவுரையாளர்கள் சிலரும் இடம்பெற்றுள்ளனர். இந்த மாணவர்கள் இங்கு தங்கிநிற்கும் தினங்களில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுடன் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.


(க-10-72)





கதிர்காமத்தில் இருந்து புறப்பட்ட சமாதானப் பேரணி நேற்று முன்தினம் யாழ்.நாகவிகாரையின் முன்பாக முடிவடைந்தது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ஜயலத் ஜயவர்தன, யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், யாழ்.மேயர் செ.கந்தையன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் உரையாற்றுவதை மேல் உள்ள படங்களில் காணலாம். யாழ்.நாகவிகாரையன் விகாராதிபதி ஞானரத்ன தேரரும் இரண்டாவது (மேல்) படத்தில் காணப்படுகிறார்.

பேரணியின் முடிவில் அமைச்சர் ஜயலத் தம்பதியினர் மற்றும் பிரமுகர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.



ஊர்தி ஒன்றில் பௌத்த பிக்குகள் அமர்ந்திருக்கும் காட்சி. படங்கள்: அற்புதன்.

## ஷெரோ[illegible]க்கு முழு அதிகாரம்

டெல்அவிவ்,மே10

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உள்ள தீவிர வாதிகளின் நிலைகள் மீது தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான முழு அதிகாரத்தை, இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பெனி யோமின் பென் எலிசியோ ஆகியோருக்கு அந்நாட்டு அமைச்சரவை வழங்கியுளளது. (ஒ)

## அமெரிக்க விமானங்கள் விபத்துக்குள்ளாகின

வாஷிங்ரன்,மே10

அமெரிக்க கடற்படையின் இரு 'ஜெட்' விமானங்கள் மெக்ஸிக்கோ வளை குடாவில் வீழ்ந்து விபத்துக் குள்ளாகின. அவற்றில் இருந்த 7 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த இரு விமானங்களும் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

# 'நேட்டிவிட்டி' தேவாலய முற்றுகை இறுதிக் கட்டத்தை அடைந்தது!

பெத்தலஹேம்,மே10

பெத்தலஹேமின் 'நேட்டிவிட்டி' தேவாலயத்துக்குள் இஸ்ரேலியப் படைகளின் முற்றுகையில் சிக்கியுள்ள பலஸ்தீனர்களை விடுவிக்கும் நடவடிக்கையின் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்றுவருவதாக செய்திகள் தெரிவி[illegible].

தேவாலயத்[illegible]பிருந்தவர்களில் 26 பலஸ்தீனர்கள் நேற்றுமுன் தினம் இரவு வாகனமொன்றில் காஸா பிரதேசத்துக்கு செல்ல அனுமதிக் கப்பட்டுள்ளனர். ஏற்கனவே பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட சில பலஸ்தீனர்கள் இவ்வாறு வெளியேற இஸ்ரேலியப் படைகள் அனுமதித்தன. 40 நாள்கள் முற்றுகையில் சிக்கியிருந்த பெத்தலஹேம் ஆளுநர் மொகமட் அல்மதானியும் இவ்வாறு விடுவிக்கப்பட்டிருந்தார்.

தற்போது நேட்டிவிட்டி தேவாலயத்துக்குள் தம்மால் தேடப்படும் பிரதான பலஸ்தீன தீவிரவாதிகள் 13பேரே உள்ளதாக இஸ்ரேல் இராணுவம் கூறுகிறது.

அவ்வாறு குறிப்பிடப்படும் 13பலஸ்தீனர்களை விடுவித்து இஸ்ரேல், பலஸ்தீனம் அல்லாத மூன்றாவது நாடு ஒன்றுக்கு பாதுகாப்பாக அனுப்புவது குறித்தே தற்போது பேச்சு நடப்பதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் அடங்கிய குழுவினர் இஸ்ரேலிய இராணுவத்துக்கும், தேவாலயத்துக்குள் சிக்கியுள்ளோர்களுக்கும் இடையே தூதர்களாகச் செயற்படுகின்றனர்.

நேட்டிவிட்டி தேவாலயத்துக்குள் எஞ்சியுள்ள 13 பலஸ்தீனர்களையும் ஏற்றுக்கொள்ளும்படி விடப்பட்ட கோரிக்கையை இத்தாலி நிராகரித்துவிட்டது. இதனையடுத்து குறிப்பிட்ட பலஸ்தீனர்களின் நிலைமை கேள்விக் குறியாகவே இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்குக்கரையில் பலஸ்தீன நகரங்கள் மீதான தமது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததையடுத்து, இயேசு பிறந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள 'நேட்டிவிட்டி' தேவாலயத்துக்குள் பலஸ்தீனர்கள் பலர் தஞ்சமடைந்தனர். அதனையடுத்தே இஸ்ரேலியப் படையினர் அத்தேவாலயத்தை முற்றுகையிட்டிருந்தனர்.(ஒ)



நேட்டிவிட்டி தேவாலயத்திற்குள் 40 நாள்களாக சிக்கியிருந்த பெத்தலஹேம் ஆளுநர் (முத்தியில்) வெளியேறியபோது எடுத்த படம்.

## அமெரிக்காவில் 'தபாற்பெட்டிகுண்டு' சூத்திரதாரி கைது!

வாஷிங்ரன்,மே10

சில தினங்களின் முன்னர் அமெரிக்காவைக் கலக்கிய 'தபாற்பெட்டி குண்டு'வெடிப்புகள் தொடர்பாக 22 வயது வாலிபர் ஒருவரை அமெரிக்கப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நவேடா மாகாணத்தின் லவ்லொக் நகரில் உள்ள ஒரு வாகனத்தரிப்பிடத்தில் தனது காரை நிறுத்திய போது லக்ஹெலல்டர் என்ற இந்த இளைஞர் எவ்.பி.ஐ. அதிகாரிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

ஹெல்டர் செலுத்திய காரிலிருந்து ஒரு துப்பாக்கி வீசிஎறியப்பட்டதை அவதானித்த அதிகாரிகள் அவரது காரை தேடிப்பிடித்து சோதனையிட்ட போது, தபாற்பெட்டிகுண்டுகளில் பயன்படுத்தப்பட்ட வெடிக்கவைக்கும் சாதனங்கள் சில அந்தக் காரில் கண்டெடுக்கப்பட்டன. இதனையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார். (ஒ)

## நக்ஸலைட்டுகள் போர்நிறுத்தம்!

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபடும் மக்கள் போர்க் குழு நக்ஸலைட்டுகள் இன்று முதல் ஒரு மாத காலத்திற்கு போர்நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து, நகஸலைட்டுகளுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளதாக ஆளும் தெலுங்கு தேச அரசு தெரிவித்துள்ளது.

நக்ஸலைட் பிரதிநிதிகளுடன் பேச்சு விவரங்கள் பற்றி முதலில் ஆலோசிக்கப்படும் என்று முதல்வர் அலுவலகம் கூறியுள்ளது. (ஒ)

# டகெஸ்தானில் குண்டுவெடிப்பு!

மர்கச்கலா,மே10

ரஷ்யாவின் டகெஸ்தான் குடியரசில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15பேர் கொல்லப்பட்டனர். செசன்யாவின் எல்லையில் அமைந்துள்ள டகெஸ்தானின் கஸ்பிஸ்க் நகரில் பிரதான சதுக்கத்தில் உள்ளூர்நேரப்படி காலை 9.30 மணிக்கு இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

விடுமுறைக் கால பயிற்சித் திட்டம் ஒன்றில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட சமயத்தில், நடந்த இந்தச் சம்பவத்தில் 80 பேர் வரை காயமடைந்ததாக நகரப் பொலீஸ் அதிகாரி அப்துல் முஸாயப் தெரிவித்தார்.

டகெஸ்தான் குடியரசின் தலைநகர் மர்கச்கலாவின் தெற்கே கஸ்பியன் கடலில் உள்ள கஸ்பிக்கில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்துக்கான காரணம் தெரியவரவில்லை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ரஷ்யப்படைகள் வெற்றி பெற்றதன் 57ஆவது ஆண்டு விழா ரஷ்யாவில் கொண்டாடப்பட்டுவரும் சமயத்தில் அதுவும் அதிபர் விளாடிமீர் புடின் மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்று உரையாற்றுவதற்கு சில நிமிடங்கள் முன்பாக கஸ்பிக்கில் குண்டு வெடித்துள்ளது.

செச்சன்யாவில் தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா கடந்த 31 மாத காலமாக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது. இதனால் டகெஸ்தானிலும் பதற்றம் நிலவிவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா.கண்டனத் தீர்மானம்

நியூயோர்க்,மே10

மேற்குக்கரையின் ஜெனின் அகதி முகாம் மீதான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையைக் கண்டித்து ஐ.நா. பொதுச்சபை கண்டனத்தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்து அறிக்கை ஒன்றைத் தரும்படி ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானை பொதுச் சபை கேட்டுள்ளது.

உலக அரங்கில்

இஸ்ரேலில் பலஸ்தீனர் ஒருவர் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்ட சில மணித்தியாலங்களின் பின்னர் ஐ.நா. பொதுச் சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 74 வாக்குகளால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்திற்கு எதிராக 4 வாக்குகள் அளிக்கப்பட்டன.

முன்னதாக இந்தத் தீர்மானத்தின் மீது நடத்தப்பட்ட விவாதத்தில் அரபு நாடுகள் உட்பட பல நாடுகளும், இஸ்ரேலையும் அதற்குப் பக்கபலமாகச் செயற்படுவதாக அமெரிக்காவையும் கடுமையாக விமர்சித்தன.

விவாதத்தில் பேசிய பலஸ்தீனப் பிரதிநிதி -

இஸ்ரேல், அப்பாவிப் பலஸ்தீனர்களைக் கொன்றுகுவிப்பதாகவும் -

இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா. எடுக்கும் தீவிர நடவடிக்கைகளை அமெரிக்கா தடுத்துவிடுவதாகவும் - தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பிரதிநிதி தனதுரையில், பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களில் உயிரிழந்த இஸ்ரேலியர்களை ஐ.நா. பொதுச்சபை மறந்துவிட்டதாகக் கூறினார்.

இதேவேளை - ஒருதலைப்பட்சமான இந்தத் தீர்மானம் பலஸ்தீனத் தரப்புக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.(ஒ)

# இந்திய நாடாளுமன்ற புதிய சபாநாயகர்

புதுடில்லி,மே10

இந்திய நாடாளுமன்ற மக்களவையின் 13ஆவது சபாநாயகராக ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிவசேனைக் கட்சியைச் சேர்ந்த மனோகர் ஜோஷி தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாரதிய ஜனதாவின் நாடாளுமன்றக் கூட்டத்தில் மனோகர் ஜோஷியை சபாநாயகராக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

மனோகர் ஜோஷி மத்திய அமைச்சராகப் பதவிவகித்து வருகிறார்.

மனோகர் ஜோஷியை காங்கிரஸ் உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் சபாநாயகர் பதவிக்கு ஏற்றுக்கொண்டுள்ளன.

மக்களவையின் சபாநாயகராகப் பதவி வகித்த தெலுங்குதேசக் கட்சி உறுப்பினர் பாலயோகி விமான விபத்தில் காலமானதையடுத்தே புதிய சபாநாயகர் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

பால் தக்ரேயைத் தலைவராகக் கொண்ட தீவிர இந்துத்துவ அமைப்பான சிவசேனைக் கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## இந்தியாவில் விமானம் வீழ்ந்து நொறுங்கியது

அம்பாலா,மே10

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 'ஜாகுவார்' ரக யுத்த விமானம் நேற்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது வீழ்ந்து நொறுங்கியது.

அம்பாலாவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விமானி உயிரிழந்தார். (ஒ)

## ஜேர்மன் அதிபர் ஆப்கான் விஜயம்

காபூல்,மே10



ஷ்கொரோடர்

ஜேர்மனி அதிபர் ஜெர்காட் ஸ்கொரோடர் ஆப்கானிஸ்தானுக்கு நேற்று ஒருநாள் விஜயம் மேற்கொண்டார். ஆப்கானின் இடைக்கால அரசுக்கு ஜேர்மனியின் ஆதரவைத் தெரிவிக்கும் முகமாகவே தான் இந்த விஜயத்தை மேற்கொண்டதாக அதிபர் ஸ்கொரோடர் தெரிவித்தார்.

தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஆப்கானுக்குச் சென்ற முதலாவது வெளிநாடொன்றின் அதிபர் ஸ்கொரோடர் ஆவார். (ஒ)

## முதலமைச்சர் மீதான கொலை முயற்சி முறியடிப்பு!

இந்தியாவின் ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் பாபுலால் மிராண்டியை கொலை செய்ய தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

முதலமைச்சர் மிராண்டி பயணம் செய்த கார் ஹசாரிபாத் தேசியப் பூங்கா அருகே சென்று கொண்டிருந்த போது, அங்கு மறைந்திருந்த மாவோ கம்யூனிய கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் -

முதலமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகள் பதில் தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளின் திட்டத்தை முறியடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தமது முயற்சி பலிக்காததால் தீவிரவாதிகள் அருகே இருந்த காட்டுப் பகுதிக்குள் தப்பிச் சென்றுவிட்டனர்.


## அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள மரக்காலை, மர அரிவுகாலை, விறகு காலை, மரத்தளபாடங்கள் உற்பத்தி செய்யும் நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் வன சட்டத்தின் பிரகாரம் வன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக ஆலோசனை வழங்கவும், பதிவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகவும் மேற்கூறப்பட்ட சகல உரிமையாளர்களையும் எனது அலுவலகத்தில் 16.05.2002 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்குத் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

க.விஜயரட்ணம்
பிரதேச முகாமையாளரும்,
Flying Squard,
அரச மரக்கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

*முகவரி:*
*பிரதேச முகாமையாளர் காரியாலயம்,*
*அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,*
*ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.* (3610)



## நீங்காத நினைவலைகள்

10-05-2002



அமரர்
**இளையவன் பொன்னன்**



திருமதி
**பொன்னன் பொன்னம்மா**

10-04-1922 ← மண்ணில் → 03-08-1930
23-03-1982 ← விண்ணில் → 13-05-1999

*அப்பா, அம்மா என்னும் இரு அன்புத் தெய்வங்களே!*
*நீங்கள் இந்த உலகை விட்டுச் சென்று விட்டாலும்*
*எமைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெருமை உங்களுக்கே!*
*நீங்கள் எமக்குப் போதித்த சீரான வழியில் வாழ்ந்துகாட்டி*
*உங்கள் கனவுகளை நனவாக்குவோம்!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (3611)



**வீடியோ படப்பிரதிகள் விற்பனை**

தமிழ் - 100/=
ஆங்கிலம் - 75/=
போஸ்டர் - 20/=

**நைட் வீடியோ**
உரும்பிராய். (3599)



## கண்ணீர் அஞ்சலி

கரம்பகம் அ.த.க.பாடசாலை அதிபர்
திரு.வி.கணபதிப்பிள்ளை அவர்களின்
அன்புத் தந்தையார்

**செ.விநாயகமூர்த்தி**

அவர்கள் காலமானதையிட்டு, துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள்.
(3602)

# வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன திட்டம் விரைவில் யாழ். குடாநாட்டிலும்

யாழ்ப்பாணம்,மே10

உலக வங்கியின் உதவியுடன் செயற்பட்டு வருகின்ற வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப்) விரைவில் யாழ். மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் ஏற்கனவே செயற்பட்டு வரும் இத்திட்டம் தற்போதே இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கமானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தையும் அதனை அண்டியுள்ள மாகாணங்களையும் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகும்.

குளங்களைப் புனரமைத்தல், உவர்நீர் உட்புகுவதைத் தடுக்கும் அணை அமைத்தல், குடிநீர் கிணறுகளை அமைத்தல், இவ்வாறான திடடங்களால் நேரடியாக நன்மைபெறாத கிராமங்களில் ஜீவனோபாய ஆதார செயற்றிட்ட வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுவருகின்றன.

இதனைச் செயற்படுத்துவதற்கு மக்களின் பங்களிப்பு சகல மட்டங்களிலும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான சமூக உணர்வூட்டல் நிகழ்வுகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ம-10)

## 158 தபாற் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே10

யாழ். மாவட்டத்திற்குரிய உள்ளூர் வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய 158 பொதிகள் நேற்று கப்பல் மூலம் யாழ். எடுத்துவரப்பட்டுள்ளன.

இதேவேளை - யாழ். மாவட்டத்திலிருந்து 39 தபால் பொதிகள் மேற்படி கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்படடுள்ளன என யாழ் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-12)

## சாவகச்சேரியில் சனசமூக நிலைய விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,மே10

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் விவரங்கள் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் திரட்டப்பட்டுவருகின்றன.

சனசமூக நிலையத்தினர் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு சமாசச் செய லாளர் அறிவித்துள்ளார். (க-117)

## தென்மராட்சி பிரதேச செயலர் பதவியேற்பு

தென்மராட்சி,மே10

தென்மராட்சி பிரதேச செயலராக செ.ஸ்ரீநிவாசன் நேற்று பதவியேற்றுள்ளார். வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலராக கடமையாற்றிய இவர் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை இளைப்பாறிச் செல்வதையடுத்து அவரது இடத்துக்குப் பதவியேற்றுள்ளார்.

(ம-117)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.மே10

வடக்கு, கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 2002ஆம் ஆண்டுக்கான தடகளப்போட்டிகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் என்று மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (க-ரி)

★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்களில் இடம்பெறவுள்ள இறுதி ஆட்டதில் யாழ் பிரதேச செயலக அணியும கோப்பாய் பிரதேச செயலக அணியும மோதுகின்றது. (ம-86)

★ ★ ★

வடமராடசி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத்தினால் ஆண்கள், பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் கரவெட்டியில் இயங்கும் வடமராடசி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத்துடன் 18ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

(ம-86)

### சுற்றுலா

வடமராட்சிகிழக்கு,மே10

இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 30மாணவர்கள் தென்பகுதிக்கு சுற்றுலாவுக்காக அழைத்துச் செல்லப்படவுள்ளார்கள்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களே இச்சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

(ம-182-173)

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே10

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் யாழ். மாவட்ட ரீதியில் சைவ சமய அறிவுப் போட்டி ஒன்றினை எதிர்வரும் 19ஆம் திகதி கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்கேற்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரித்து செயலாளர், இந்து இளைஞர் மன்றம், 66,கொழும்புத்துறை வீதி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ஓ)

## கலந்துரையாடல்

கொக்குவில்,மே10

சகல பிரதேச சபை, நகர சபை செயலாளர்களுக்குமான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பகல் 9.30 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி கலந்துரையாடலில் அனைத்து உள்ளூராட்சி உதவியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-69)

## தாய்சேய்நல கிளினிக்குகள் மீண்டும் ஆரம்பம்

தென்மராட்சி,மே10

இடம்பெயர்வின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்த தாய், சேய் கிளினிக்குகள் மீண்டும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு கிளினிக நடத்தி திரிபோஷா மாவும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## கோழிக் குஞ்சுகளின் விலைவீழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே10

யாழ். குடாநாட்டில் கோழிக்குஞ்சுகளின் விலை சரி அரைவாசியாகக் குறைந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு தரைப்பாதையூடாக வியாபாரிகளால் எடுத்துவரும் பொருள்களில் கோழிக்குஞ்சுகளும் அடங்கியுள்ளன. பெட்டிபெட்டியாக கோழிக் குஞ்சுகளைக் கொண்டு வரும் வியாபாரிகள் அவற்றை வீதியோரங்களில் போட்டு ஒரு கோழிக்குஞ்சு 20ரூபாப்படி விற்பனை செய்துவருகின்றனர்.

இதற்கு முன்பு யாழ். குடாநாட்டில் கோழிக் குஞ்சுகள் பேடு ஒன்று 41ரூபாவும், சேவல் ஒன்று 12ரூபாவும் விற்பனை செய்யப்பட்டுவந்தது தெரிந்ததே. (ம-15)

## யாழ்.கல்வியியற் கல்லூரி மாணவி ஜேர்மனி பயணம்

யாழ்ப்பாணம்,மே10

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இலக்கிய ஆக்கப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவி ஜேர்மனிக்கு இலவசமாக கல்விச் சுற்றுலா மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள் ளார்.

சத்தியநாதன் தயாளினி என்ற மாணவியே இந்த வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

'சமாதான முயற்சிகளும், முரண்பாடு நிலைமாற்றமும்' என்ற தலைப்பில் மேற்படி போட்டி நடத்தப்பட்டது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம மேற்படி சுற்றுலாவுக்கான நிதி மற்றும் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

(எ-180)

# சமாதானத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறை தினங்கள் என்று பாராமல் எல்லா நாள்களும் வீதி திறந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார் தமிழ்ச்செல்வன்.

யாழ். மக்களுக்கு ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 300 லொறிகளில் பொருள்கள் செல்லவேண்டும். இப்போது வீதி காலை 8.30இல் இருந்து மாலை 5மணி மட்டுமே திறந்திருப்பதனாலும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாதை முற்றாக மூடப்பட்டிருப்பதனாலும் 300 லொறிகளில் பொருள்கள் செல்ல வழி இல்லை.

முகமாலையிலும் ஓமந்தையிலும் படையினரின் சோதனைச் சாவடியில் மக்கள் அதிக நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. அதனால் காத்திருப்பும் போக்குவரத்து நெரிசலும் அதிகமாகிறது. அழுகிப் போகும் தன்மையுடைய பொருளுடன் செல்லும் லொறிகள் காத்திருக்க வைக்கப்படுவதால் பொருள்கள் பழுதடைந்து நஷ்டம் ஏற்படுகின்றது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று மூவின மக்களும் இந்த வீதியால் இப்போது பெரும் எண்ணிக்கையில் செல்கிறார்கள். சோதனைச் சிக்கல்கள், சிரமங்கள், காத்திருப்புகள் ஆகியவற்றால் அவர்கள் அலுத்து சலிக்கிறார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### கடற்படைத் தாக்குதல்

கடற்படைத் தாக்குதல் பற்றித் தமிழ்ச்செல்வன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடற்படை சமாதான முயற்சிகளுககு முழு எதிரான மனப்போக்கையே கொண்டிருக்கிறது. சமாதான முயற்சிகளை முறியடிக்கவே கடற்படை விரும்புவதாகத் தெரிகிறது.

கடலில் எங்களுடைய படகு எதையும் கடற்படை தாக்க முற்பட்டிருக்குமானால் நடப்பது வேறாக இருந்திருக்கும். விளைவு நிச்சயமாகப் பாரதூரமானதாகவே இருக்கும். 1987 இலும் 1995இலும் சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததற்கு முக்கிய காரணம் கடற்படைதான்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1.3பிரிவின்படி இலங்கையின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு புலிகள் மீது தாக்குதல் நடத்தாமல் தங்கள் சட்டபூர்வமான கடமையைச் செய்யலாம்.

அரச படைகளோ, புலிகளோ வெடிபொருள்களையும் இராணுவ உபகரணங்களையும் தத்தமது பகுதிகளுக்கு அப்பால் அடுத்தவர் பகுதிக்குக் கொண்டுசெல்வதை புரிந்துணர்வு உடன்படிக்கையின் 1.7 பிரிவு தடுக்கிறது. ஆனால், தத்தமது பகுதிகளுக்குள் அவற்றைக் கொண்டு செல்வதைத் தடுக்கவில்லை என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இப்போது படையினர் யாழ். - கண்டி வீதியில் பிரயாணம் செய்யலாம். எங்களுக்கு அதில் ஆட்சேபனை இல்லை. 14நாள்களுக்கு முன்னரே அவர்கள் பிரயாணம் செய்யக் கூடிய வசதி ஏற்பட்டுவிட்டது. ஆனால், அவர்கள் அந்த வசதியை இன்றும் பயன்படுத்திக்கொள்ளவில்லை - என்றார் தமிழ்ச்செல்வன். (ம)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே10

கச்சாய் தெற்கு ஸ்ரீ பாதாள வைரவர் ஆலயத்தில் சித்திரப் பரணியை முன்னிட்டு நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் விநாயகருக்கு பஞ்சவிம்சதி சங்காபிஷேகமும், வைரவர் பெருமானுக்கு அஷ்டோத்திர சதசங்காபிஷேகமும் பூசைகளும் நடைபெற்று வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (எ)

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று வெள்ளி காலை 10 மணிக்கு இடம்பெறும். தீர்த்தோற்சவம் நாளை சனி காலை 8.45 மணிக்கு இடம்பெறும் (க-100)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி நேற்று (09.05.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையப்பாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம்தம்பி (புகையிரத நிலைய அத்தியட்சகர்)அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரநாதன், தர்மலிங்கம், மகாதேவா, திருமதி யோகாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*274,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
திருமதி கெங்காதரன் ராகினி
(அம்மணி)
ராகுலன் (அம்பி-சுவிஸ்)

(3620)

## திருமதி எமிலி அன்னம்மா சபாபதி

சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எமிலி அன்னம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் யோன் தம்பு தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற முன்னாள் கெட்மன் துன்னாலை வடக்கு வல்லிபுரம் குழந்தஞாச்சி தம்பதியினரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற கெட்மன் சபாபதியின் (தம்பிராசா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயரட்டினம் (மீன்பிடி திணைக்களம்) மற்றும் அருள்பிரகாசம் (S.M.), காலஞ்சென்றவர்களான சாம் தம்பு (குருவானவர்), யேம்ஸ் தம்பு (A.O.கல்வித் திணைக்களம், யாழ்.), நேசம்மா, பாக்கியம்மா, ஞானம்மா, தவமணி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருள்செல்வம் (அருள், ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம், பூநகரி), நவரத்தினராசா (கனடா, குருவானவர், முன்னாள் ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள உத்தியோகத்தா - யாழ்ப்பாணம்), உருத்திரகுமார் (விற்பனைத் திணைக்களம், சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் றேனுகாதேவி (கிளி), சறோயாதேவி, சைலஜாதேவி (நந்தா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரகாஷ் (1998 A/L Com. K.H.C.), பிரவிண்ணா (உயர்தொழில்நுட்ப கல்லூரி, H.N.D.A. முதலாம் வருடம்), பிரதீபா (2002 A/L Com. J.H.L.C.), ரஜீவன் (பொறியியலாளர், கனடா), பிரியா (கணக்காளர்), சஞ்சீவன், தினேஸ் (J.C.C.), நிசாந்தன், திலீப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2002) வெள்ளிக்கிழமை கொக்குவில் கிழக்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*பொற்பதி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
S.P.அருள்செல்வம்
(மகன்)

(3621)


லாலா
சோப்
சன்சயின்
சோப்
எமது மண்ணில் புதுப்பொலிவுடன்
தரமான முறையில்
விற்பனைக்கு வந்துவிட்டது!
லாலா அச்சுவேலி.
(C/22062)

ராஜா யாழ்ப்பாணம்
5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/21980)

தவறிவிட்டது
520 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த *கணபதிப்பிள்ளை சசிகரன்* என்பவரது கறுப்பு நிற சூட்கேஸ் முக்கிய ஆவணங்களுடன் நேற்று (09.05.2002) வியாழக்கிழமை வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
வி.கே.வி. கொமினிக்கேசன்
T.P. (021-2044)
கஸ்தூரியார் றோட். யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(3624)

படிவம்
தாதியர் (ஆண்/பெண்)கல்லூரி
விண்ணப்பப் படிவம் விற்பனையாகிறது.
விண்ணப்ப முடிவு திகதி: 07.06.2002
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C/22075)

லஷ்சுமி இணுவில்.
ரஜனி, நக்மா, ரகுவரன்
நடித்த
பாட்ஷா
(ரீலீஸ்)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)
(3626)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா, மனோரமா,
மணிவண்ணன் நடித்த
பெரியண்ணா
தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-21981)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடங்கள்)
சிம்ரன், நாசர், கபாலி
நடிப்பில்
கண்ணுபடப்போகுதைய்யா
(ரீலீஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (பு.நே.) (3608)

# மட்டக்களப்பிலும் படைக்கு ஆள்திரட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படைகளில் ஆள்களைச் சேரும்படி கோரி ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

படைகளுக்கு 5 ஆயிரம் பேரைச் சேர்க்கும் அரசின் நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பில் செங்கலடி, சித்தாண்டி, வந்தாறுமூலை, மாவடிவேம்பு, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் படையினர் வாகனங்களில் ஒலிபெருக்கிமூலம் படைக்கு ஆள்கள் திரட்டும் அறிவிப்பை வெளியிட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் ஆரியகுளம் நாகவிகாரைக்கு அருகில் படைக்கு ஆள்சேர்க்கும் மையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. (ம-3-8)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கண்காணிப்பதுடன் நாட்டுக்குள் ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுக்கவும் முடியும் - என்றும் அவர் கூறினார்.

கடலில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறும் செயலைக் கண்காணித்து அதை மற்றுமொரு தரப்பான இந்தியா உறுதிசெய்யவும் வாய்ப்புக் கிட்டும் என்றும் அவர்சொன்னார்.(ம-3)

## கண்காணிப்பு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் பிற்பகலிலும அங்கு இருகட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இன்று காலையும் பேச்சுக்கள் இடம்பெறவிருக்கின்றன.

தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன், அரசியல்துறையை சேர்ந்த புலித் தேவன, தொல்காப்பியன் ஆகியோரும இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

ஏ-9 கண்டி வீதி ஊடாக நேரடியாக பஸ் சேவை நடத்துதல், சோதனைச் சாவடிகளில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் என்பன தொடர்பாக இந்தப் பேச்சில் ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-3-164)

## அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம்,மே10

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மை சங்கத்தின் தொழில்நுட்ப அதிகாரிகள் குழுவைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் நால்வர் அடங்கிய அணி ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது. இந்த அணியினர் நாளையும் நாளை மறுதினமும் காலை 9மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மெய்வன்மைச் சட்டவிதிகள் தொடர்பான விரிவுரைகளை நடத்துவர்.

இந்த விரிவுரைகளில் பங்குபற்ற விரும்புபவர்களை யாழ். அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்துடன் உடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3).

## இன்று ஊர்வலம்

கொழும்பு,மே10

நாட்டுப் பிரிவினைக்கு எதிரான தேசிய இயக்கம், இன்று கண்டி போகம்பரையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஊர்வலம் ஒன்றையும் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்துகிறது.

## தமிழீழ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகையையும் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி வரைக்குமான வட்டித் தொகையினையும் செலுத்தி மீளப்பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் அறிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதிக்குப் பின்னர் தமது வைப்பகக் கணக்குகளை செயற்படுத்தாதவர்கள் அவை தொடர்பான விவரங்களைப் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவை தொடர்பான விளக்கங்களையும் மேலதிக விவரங்களையும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் காலை 9மணிமுதல் மாலை 5மணிவரை கொக்குவில், பொற்பதி வீதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகத்தில் வைப்பக அலுவலரைச் சந்தித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## சடலம் கரையொதுங்கியது

மதுரை,மே10

தமிழகத்தின் கரையோர மாவட்டமான இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியில் சடலம் ஒன்று கரையோதுங்கியுள்ளது.

அண்மையில் வாகரையில் இடம்பெற்ற கடற்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த மீனவருடைய சடலமான இது இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

## ஓமந்தையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சந்தித்த சமயமே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"தாண்டிக்குளத்தில் உள்ள படையினரின் சோதனை நிலையத்துக்கும் விளக்குவைத்தகுளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் சோதனை நிலையத்துக்கும் இடையில் பொது மக்கள் பயணம் செய்யும் போது பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையை நீக்குவதற்கு, அந்தப் பகுதியில் மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு அனுமதிக்க வேண்டும். அத்துடன் குறுந்தூர பஸ் சேவையும் அங்கு நடத்த வேண்டும்" - என்று மேலவன் கோரிக்கை விடுத்தார்.

இதை நிறைவேற்ற இரு தினங்கள் அவகாசம் தரும்படி இராணுவத் தளபதி கோரியுள்ளார். (ம-3)

## வல்லுறவு சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம்,மே10

சுதுமலையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் கத்திமுனையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்படும் நபரை மானிப்பாய்ப் பொலீஸார் நேற்றுக்கைது செய்தனர்.

நேற்று மாலை பொலீஸாரால் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்ட பிரஸ்தாப சந்தேகநபர் அங்கு வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நேரக்கட்டுப்பாடின்றி போக்குவரத்துக்கு அனுமதி வழங்கினால் பொதுமக்கள் பிரச்சினைகள் இன்றித் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

"செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னத்தை வாபஸ் பெற்று போக்குவரத்தைக் கூடுதலான நேரம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்" - இப்படி அவர்கள் கோரியுள்ளனர். (ம-3)


D.C.M நந்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
B.A. B COM PART II
பொருளியல்
S. வரதராஜன் B.A (Hons)
ஆரம்பம்
11 - 05 - 02 சனி
6.15 A.M (மு.ப.)

BEACON
DEGREE
G.A.Q. P II
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்: 11.05.2002
(3541) காலை 9 மணி

நாடகக் கலைஞர்கள், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு
திரு.அ.தார்சீசியஸ்
(நடிகர், ஊடகவியலாளர், பீ.பீ.ஸி., ஐ.பீ.ஸி., தமிழ்க்குடில் வானொலி)
இடம் : பொருளியல் துறை மண்டபம், யாழ். பல்கலைக்கழகம்
காலம் : நாளை (11.05.2002) சனிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
(3625) ஆர்வலர்களை அழைக்கின்றோம்.
நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2003
*சேதன இரசாயனம் ஆசிரியர் திரு.மகேஸ்வரன் B.Sc. (Hons)
*மின்புலம் ஆசிரியர் திரு.ஜெயசீலன் B.Sc. (Hons)
11-05-2002 சனி 4.30 (3603) 12.05.2002 ஞாயிறு 4.30

தேவை
சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகாக ஆரம்பிக்கப்படவுள்ள பொதிகை கொம்பியூட்டர் கிராபிக்ஸ் அச்சகத்திற்கு Page Maker, Corel Draw, Ms Word போன்றவற்றில் Type Setting செய்யத் தெரிந்தவர்கள் தேவை.
சுயவிவரங்களுடன் 11.05.2002 அல்லது 12.05.2002 அன்று நேரில்வரவும்.
தொடர்புக்குரிய இடம்:
Institute of Informatics Studies,
Nelliyady, Karaveddy.
(கொடிகாமம் வீதி)
(3576)

நாளை ஆரம்பம் → 8 a.m.
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M. Spl.)
A/L 2004
தனிவியாபார முடிவுக் கணக்கு
Sat., Sun. → 8 - 9 a.m.
விக்னா கல்வி நிறுவனம் (3619)

தேவை
* கணனி இயக்குநர்
* தட்டெழுத்தாளர் (தமிழ்)
* தொலைபேசி இயக்குநர்
* கணக்குப் பதிவாளர்
விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ, நேரடியாகவோ, 23.05.2002 இற்கு முன் அனுப்பவும்.
(பெண்கள் விரும்பத்தக்கது)
கணேசன் கொமினிக்கேஷன்ஸ்
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில் சந்தி.
தொ.பே.: 2585 (3614)

மீண்டும் யாழ்நகரில் BASF
ஜெர்மனியின் தரமான தயாரிப்புகள்
கண்ணாடி இழைப்படகுகள் (FIBRE GLASS BOATS)
கண்ணாடி இழைத் தளபாடங்கள் (FIBRE GLASS FURNITURES)
கண்ணாடி இழை நீர்த்தாங்கிகள் (FIBRE GLASS WATER TANKS)
போன்றவற்றை தயாரிப்பதற்கான
உற்பத்திப் பொருள்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்
(SOLE DISTRIBUTORS FOR JAFFNA)
ஸ்ரீ மகா விஷ்ணு
Shri Maha Visnu
No. 68, 70,72, Stanley Rd, Jaffna. (3615) General Merchants & Commission Agents.

Coca Cola - கொகா கோலா
மென்பானம்
ஏக விநியோகத்தர்கள்
ஈஸ்வர அம்பாள் அன் கோ
155 (27), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
எம்மிடம் கொகா கோலா தயாரிப்புகளான
Coca Cola - கொகா கோலா
Fanta - ஃபன்டா
Sprite - ஸ்பிறைட்
Portello - போட்டலோ
மென்பானங்கள் மலிவுவிலையில்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை ரூபா 72/-
தலைமையகம்,
ஈஸ்வரபகவான் அன் கொம்பனி
100, ஆஸ்பத்திரி வீதி,
(3623) யாழ்ப்பாணம். T.P.: 021-2507

RAMCO CEMENT
"ராம்கோ" சிமெந்து
எமது நிறுவனத்தால் பல தடவைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான "ராம்கோ" கோபுர மார்க் சிமெந்து 09.05.2002 வியாழன்முதல் 400ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.
தொடர்புகொள்ளவும்.
ஈஸ்வரபகவான் அன் கொம்பனி
100, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2507
(3622)
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2350


## மரண அறிவித்தல்

### இளையதம்பி துரைராசா

கோப்பாய் வடக்கு, கட்டுப்பலானையைச் சேர்ந்த இ.துரைராசா நேற்று (09.05.2002) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் நளாயினியின் அன்புக் கணவரும் ரஜனி (பிரான்ஸ்), காந்தரூபன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலராஜன் (பிரான்ஸ்), சாருஜன் (கோப்பாய்) ஆகியோரின் மாமனாரும் அருண், நிகிலன், நித்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுப்பலானை, கோப்பாய் வடக்கு. (C/22076) தகவல்: மனைவி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.